Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 138 | செவ்வாய்க்கிழமை | பங்குனி 31 ஆம் நாள் 13 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16
விலை : ரூ.30

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## கொவிட் தொற்றுடன் 9 பேர் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஏப்.13
வடக்கு மாகாணத்தில் நேற்று 9 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 8 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் 15

# 50 பக்க ஆவண கோவையில் சவேந்திரவின் குற்றங்கள்!

## பிரிட்டனிடம் கையளித்து யஸ்மின் சூக்கா அதிரடி

கொழும்பு, ஏப்ரல் 13
இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தொடர்பாக 50 பக்க ஆவணக் கோவையைத் தொகுத்து அதைப் பிரிட்டன் வெளிநாட்டு பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் தடைகள் திணைக்களத்துக்கு சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் சமர்ப்பித்துள்ளது.

இந்த ஆவணம் தற்போதைய இலங்கையின் இராணுவத் தளபதியாக இருக்கும் சவேந்திர சில்வா கடந்த வருடம் ஜூலை 6ஆம் திகதி உருவாக்கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய மனித உரிமைகள் தடை பொறிமுறையின் கீழ் ஏன் கண்டிக்கப்பட வேண்டும்? என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது. 15



## நாளை நோன்பு ஆரம்பம்

கொழும்பு, ஏப்.13
இலங்கை முஸ்லிம்களுக்கு நாளை புதன் கிழமையில் இருந்து ரமழான் மாத நோன்பு ஆரம்பமாகின்றது எனக் கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் தலைமையில் நோன்பை ஆரம்பிப்பதற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்று மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது. 15

## பொறுப்பற்ற செயல்களின் விளைவுகள் மே மாதத்தில்!

கொழும்பு, ஏப்.13
மக்களின் பொறுப்பற்ற நடவடிக்கை காரணமாக எதிர்வரும் மாதம் பொது மக்கள் தனிமைப்படுத்தலில் இருக்க நேரிடும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது-
அங்காடிகளிலும், பஸ்களிலும் மக்கள் அதிகமாகக் கூடுவதைக் காண முடிகின்றது. மக்கள் இவ்வாறு பெரும் எண்ணிக்கையில் கூடுவது மிகவும் தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தும். 15

# யாழ்ப்பாணத்தின் நிலைமை மோசம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 13
கொரோனா வைரஸ் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் தற்போது அச்சுறுத்தலான நிலை காணப்படுகின்றது. அங்கு உருவான கொத்தணி கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் வைரஸ் பரவல் பூஜ்ஜிய மட்டத்துக்கு வரும்வரை விழிப்பாகவே இருக்கவேண்டும். இவ்வாறு சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுகத் சமரவீர நேற்று தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரி 15

## முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மே 18ஆம் திகதி நினைவேந்தல்

முல்லைத்தீவு, ஏப். 13
மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வை ஏற்பாடு செய்யும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு வழமைபோன்று இந்த வருடமும் திட்டமிட்டபடி நடைபெறும். குறித்த தினத்தன்று காலை 10.30 மணிக்கு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி 15

## சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்த புதிய சட்டம்!

கொழும்பு, ஏப்.13
இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடான போலிப் பரப்புரைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டத்தைக் கொண்டு வர அரசு தயாராகி வருகின்றது.
அதற்கமைய நீதி அமைச்சு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு 15

## புத்தாண்டுக்குப் பின்னர் அமைச்சரவை மாறலாம்!

கொழும்பு, ஏப். 13
புத்தாண்டுக்குப் பின்னர், அமைச்சரவையில் மாற்றம் செய்வதற்கு அரசு ஆலோசித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அமைச்சரவை மாற்றத்தின்போது, ஆளும் கட்சியிலிருக்கும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மூவருக்கு இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப் 15

## யாழில் 1,48,000 பேருக்கு ரூ.5,000 உதவி தொகை!

யாழ்ப்பாணம், ஏப்.13
யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 48 ஆயிரம் பேருக்கு 5 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, அவர்களில் ஏறத்தாழ 50 வீதமானோருக்கு நேற்றுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. 15

## விசாரணை வளையத்துள் 80 பேர்

கொழும்பு, ஏப்.13
உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக உள்ள 80 அரசியல்வாதிகள் மீது இலஞ்ச, ஊழல் மற்றும் மோசடிகள் தொடர் பில் விசா 15

## முதியவரை நெரித்துக் கொன்று நகைகள், பணம் கொள்ளை!

### மீசாலை கிழக்கில் கொடூரம்

கொடிகாமம், ஏப்.13
நள்ளிரவில் வீடு புகுந்த கொள்ளையர்கள் நகைகள், பணத்தைக் கேட்டுத் துன்புறுத்தியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொள்ளையர்கள் நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மீசாலை கிழக்கில் நடந்துள்ளது.
அல்லாரை வீதியில் உள்ள வீடொன்றில் வயோதிபத் தம் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா அரசின் நிர்வாகம் பலவீனமடைந்து விட்டது!

அரசை எச்சரித்தார் முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

கொழும்பு, ஏப். 13
அரச நிர்வாகம் பலவீனமடைந்துள்ளது. அரச நிறுவனங்களின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தாவிட்டால் பெரும் நெருக்கடிகள் ஏற்படும் என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிர்வாகம் பலவீனமடைந்துள்ளது. அரச திணைக்களங்கள், மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் மோசடியாளர்களாக உள்ளார்கள்.

ஒரு சிலருக்கு அரச நிர்வாகம் குறித்து எவ்வித முன்னனுபவங்களும் கிடையாது. இவ்வாறான நிலையில் அரச செயலொழுங்கை வினைத்திறனாக முன்னெடுக்க முடியாது. தகுதியானவர்களுக்கு உரிய பதவிகளை வழங்க அரசு கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை,
முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ச மாத்திரம் நேரத்துக்கு ஏற்றாற் போல் மாற்றமடையாமல் உள்ளார். தற்போதைய அரசியல்வாதிகள் இவரிடமிருந்து பல நல்ல விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். என்றார்.
(மற்றொரு செய்தி 03 ஆம் பக்கம்)
(து-இ)

## 5,000 ரூபா கொடுப்பனவில் தவறான பொறிமுறைகள்!

சுட்டிக்காட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப். 13
குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அரசு எடுத்த பொறிமுறை தவறானது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த முடிவு புத்தாண்டு வருவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டது. இது அரசின் இயலாமையைக் காட்டுகிறது.

ஆயிரம் ரூபாவுக்கு அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளல் உட்பட பல்வேறு தோல்வியுற்ற முயற்சிகளிலேயே அரசு ஈடுபட்டுள்ளது.

மேலும் ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கான முடிவு எட்டப்பட்ட நேரத்தில், அரச விடுமுறை அறிவிக்கப்பட்டது. நாடு, பொருளாதாரம் அல்லது மக்கள் மீதான அக்கறை குறித்து அதிகாரிகளுக்கு புரிதல் இல்லை என்பதை இந்த முடிவு காட்டுகிறது. - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-இ)

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

வாந்தி எடுத்து மயங்கி வீழ்ந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கோப்பாய், இராச வீதியைச் சேர்ந்த குலதீஸ்வரன் லிபிசன் (வயது-26) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 9ஆம் திகதி மதியம் வீதியால் நடந்து சென்ற இவர், தண்ணீர் குடித்தபோது வாந்தி எடுத்து மயக்கமடைந்துள்ளார். அவரது நண்பர் உடனடியாக அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்துள்ளார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## இந்தியாவுக்கு பறக்கிறார் ஜனாதிபதி கோத்தாபய

கொழும்பு, ஏப். 13
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்த மாத இறுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் எனவும், அவர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அல்கொய்தா, அபுசயாப் இயக்கங்களைச் சேர்ந்த பயங்கரவாதிகள் சமீப காலமாக இலங்கையைத் தங்கள் தளமாகப் பயன்படுத்த முயற்சித்து வருகின்றனர். அரபு நாடுகள் கிழக்கு, தெற்கு ஆபிரிக்க நாடுகள் ஆகியவற்றில் செயற்படும் இந்தப் பயங்கரவாதிகள் இலங்கையில் நடமாடுகின்றமை அதிகரித்துள்ளது.

மேலும், சர்வதேச போதை மருந்து கும்பலும் இலங்கையைப் போதைப்பொருள்கள் கடத்தும் மையமாக வைத்திருக்க முயற்சிக்கின்றது. இதை முறியடிக்க இலங்கையில் போதிய படைபலம், புலனாய்வு அமைப்புகள் இல்லை. இதற்கு இந்தியா போன்ற பெரிய நாடுகளுடைய உதவி இருந்தால்தான் முடியும். அதிலும் அயல் நாடான இந்தியாவால் தான் இதற்கு உதவ முடியும்.

எனவே, இதற்கான ஒத்துழைப்பை வழங்கும்படி இந்தியாவிடம் கேட்டுக்கொள்வதற்காக கோத்தாபய ராஜபக்ச இந்தியா வரவுள்ளார் என்றுள்ளது. (து-22)

## 500 மில். அமெ. டொலர் கடன்பெற இலங்கை - சீனா நேற்று ஒப்பந்தம்

கொழும்பு, ஏப். 13
சீன அபிவிருத்தி வங்கி ஊடாக 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெறும் ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் பாலித கொஹன்ன இந்த ஒப்பந்தத்தில் நேற்றுக் கைச்சாத்திட்டார். கொவிட்19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் அந்நிய செலாவணியை ஊக்குவிக்கும் வகையில் குறித்த கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடன் தொகை தொடர்பிலான ஒப்பந்தம் குறித்து சீனாவில் உள்ள இலங்கைக்கான தூதரகம் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பில் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹன்ன தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் பொருளாதாரத்தை புத்தாக்கம் செய்யும் நோக்கில் சீன அரசு இந்தக் கடன் தொகையை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடன் தொகையைப் பெறுவதன் ஊடாக இலங்கையின் முதலீடுகளை மேற்கொள்ளும் சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ள முடிவதுடன், டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியும். நெருக்கடியான சூழ்நிலையில் நட்பு நாடு என்ற அடிப்படையில் சீனா இலங்கைக்கு குறித்த கடன் தொகையை வழங்கவுள்ளது.

இந்த 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன், சீன அரசு கடந்த வருடம் வழங்க சம்மதித்திருந்த ஒரு பில்லியன் அமெரிக்க டொலரின் இரண்டாம் பகுதியாகும். இந்தநிதியை பெற்றுக் கொள்வதற்கு சீனாவில் உள்ள இலங்கைத் தூதரகம் உரிய சீன நிறுவனங்களுடன் பேச்சு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, இரண்டு வாரங்களுக்கு முன்னர் 6 இலட்சம் கொவிட்19 வைரஸ் தடுப்பூசிகளை சீன அரசு இலங்கைக்கு இலவசமாக வழங்கியிருந்தது. கொவிட் 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் மட்டுப்படுத்தப்பட்ட பின்னர் சீன நாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கைக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளார்கள்.

இதுதவிர, சீனாவில் உள்ள இலங்கைக்கான தூதரக காரியாலயத்தில் இலங்கை உற்பத்திகளை சீன நாட்டு சந்தையில் அறிமுகப்படுத்தல், சீன நாட்டு முதலீடுகளை இலங்கையில் துரிதப்படுத்தல், ஆகிய நடவடிக்கைகளுக்கான பேச்சு நடந்துள்ளது. குறுகிய காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் மேம்படுத்தப்படும்- என்றார். (து-இ)

## 5ஆயிரம் ரூபாவைப் பெற இரவிரவாக அலைந்த மக்கள்



வவுனியா, ஏப். 13
அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதில் சீரான முறைமை கடைப்பிடிக்கப்படாமையால் உரிய நேரத்துக்கு அவற்றை வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அவற்றைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் நேற்று இரவிரவாக பெரும் இடையூறுகளை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக வவுனியாவில் குறித்த 5 ஆயிரம் ரூபாவைப் பெறுவதில் பொதுமக்கள் நேற்று இரவிரவாக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இரவு 9 மணியையும் தாண்டி காத்திருந்தோம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் மற்றும் பொருண்மியம் குறைந்த குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று அரசு அவசர அவசரமாக அறிவித்திருந்தது.

அந்த வகையில் நேற்யறைய தினத்திலிருந்து குறித்த தொகையை மக்களுக்கு வழங்கும் செயற்பாடுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முறையான ஒரு திட்டம் வகுக்கப்படாமல் அவசரமாக அரசு குறித்த அறிவிப்பை வெளியிட்டதால் உரிய காலத்துக்குள் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியாமல் பொதுமக்கள் திண்டாடிவருகின்றனர். அவர்கள் மட்டுமன்றி குறித்த நிதியை வழங்குவதில் அரச ஊழியர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி, சில கிராமங்களில் பயனாளர் பட்டியல் தொடர்பாகவும் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (து-110)

## குளக்கட்டிலிருந்து பாய்ந்து முச்சக்கரவண்டி விபத்து

வவுனியா வைரவப்புளியங்குளம் குளக்கட்டிலிருந்து முச்சக்கரவண்டியொன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்து நேற்று இரவு 7மணியளவில் இடம்பெற்றது. கூமாங்குளம் பிரதான வீதியூடாக வவுனியா நகர் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டி வைரவப்புளியங்குளம் குளக்கட்டை அண்மித்த சமயத்தில் கட்டுப்பாட்டையிழந்து குளக்கட்டிலிருந்து கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. முச்சக்கரவண்டியை மீட்கும் பணியில் பொதுமக்கள் ஈடுபட்டனர். (து18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை முறை வேண்டவே வேண்டாம்

## அரசுக்கு விடுக்கப்பட்டது இறுதி எச்சரிக்கை
## புத்தாண்டுக்கு பிறகு கடும் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 13

மாகாணசபைத் தேர்தல் மட்டுமல்ல, மாகாணசபை முறைமையே வேண்டாம். புத்தாண்டு முடிந்ததும் இதனை உறுதியாக வலியுறுத்துவோம் என்று அபயராம விகாரையின் விகாராதிபதி கலாநிதி முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது.

'நாட்டில் பொருள்களின் விலை உச்சம் தொட்டுள்ளது. மறுபுறத்தில் எண்ணைய் பிரச்சினையும் உருவெடுத்துள்ளது. மைத்திரி - ரணில் ஆட்சியில் ஏற்பட்ட பாதிப்புகளை தவிர்க்கவே புதிய அரசை ஆட்சி பீடம் ஏறவைத்தோம். ஆனால் இன்று நடப்பது என்ன? குறைகளை சுட்டிக்காட்டும் எம்மை விமர்சிக்கின்றனர். ஊழல், மோசடிகள் அதிகரித்துள்ளன.

விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில, அபயராம விகாரை உள்ளிட்ட தரப்பினர் இல்லாவிட்டால் மொட்டு கட்சி என ஒன்று உருவாகியிருக்காது. நாம் ஒன்றரை வருடங்கள் பொறுமை காத்தோம். மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் அரசு எந்த இடத்தில் உள்ளது என்பது தெளிவாகும். மாகாணசபைத் தேர்தல் முறைமை வேண்டாம். புத்தாண்டுக்கு பின்னர் நாம் பலமடைவோம். அப்போதும் இதற்காக உரத்து குரல் எழுப்புவோம். தோல்வியை நோக்கி பயணிக்கவேண்டுமென்றால் மாகாண தேர்தலை நடத்துமாறு குறிப்பிடுகின்றோம். குறித்த தேர்தல் அவசியமில்லை என்பதே எமது நிலைப்பாடாகும்' என்றார். (ம-44)



# அழிவுப் பாதையை நோக்கி செல்கிறது இலங்கை அரசு

## தமிழரசின் தலைவர் மாவை எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 13

'இலங்கை அரசின் போக்குகள் சர்வதேச நாடுகளின் உறவு நிலையில் இருந்து விலக்கிவைக்கும் நிலையை நோக்கி நகர்ந்து செல்கின்றன. இதனை உணராமல் இந்த அரசு செயற்படுகின்றது இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார். அரசின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை உதறித் தள்ளுகின்ற செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. இது இலங்கைக்கு நல்லதல்ல. இது தொடர்பில் பல வல்லுநர்கள் உள்ளூர், வெளியூர் மனித உரிமை அமைப்புக்கள் இலங்கையின் செயற்பாட்டுக்குக் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றார்கள்.

ஏற்கனவே கொரோனா வைரஸ் தாக்கத்தால் பொருளாதார இழப்புகள் அதிகரிக்கும் நிலையில் பல தொழில் நிறுவனங்கள் மூடப்படும் சந்தர்ப்பங்கள், வேலைவாய்ப்பு இல்லாமல் போகும் நிலைகள் என பல இழப்புக்களைச் சந்தித்துவரும் நிலையில், சரியான திட்டமிடல் இல்லாமல் அழிவுப் பாதையை நோக்கி இந்த அரசு செல்கின்றது.

இந்த அரசு, நாட்டு மக்கள் எத்தகைய நிலையில் இருக்கிறார்கள் என்பதை அறியாது செயற்படுகின்றது. இத்தகைய போக்கு சர்வதேச நாடுகள், வெளிநாட்டு சக்திகளிடம் இருந்து ஒதுக்கப்படுகின்ற, அந்நியப்படுகின்ற நிலையைத்தான் காட்டுகின்றது.

இலங்கையில் காணப்படுகின்ற இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கோ அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவோ, காணிகள் விடுவிப்பு தொடர்பாகவோ, போரால் பாதிக்கப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்கோ திட்டங்களை வகுக்க முடியாதவர்களாக பொருளாதார ரீதியான முன்னேற் றங்களைக்கூடச் செய்ய முடியாதவர்களாக இந்த ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள்.

இது ஜனநாயகமற்ற நாடாக மாறுகின்ற நிலை காணப்படுகின்றது. அது மட்டுமன்றி சர்வாதிகாரப் போக்கில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் நிலையைக் கொண்டு வருகின்றது. ஆட்சிபீடம் ஏறியது முதல்கொண்டு நிர்வாகத்துக்குள் இராணுவ அதிகாரிகளை நியமித்து வருகின்றார்கள். இது வடக்கு, கிழக்கு மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றது.

நாங்கள் இந்த அரசின் செயற்பாடுகளைக் கண்டிக்கின்றோம். அதுமட்டுமன்றி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட நாடுகளும் நடுநிலை வகித்த நாடுகளும் இந்த அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ம-22)



# மாகாணத் தேர்தலில் சு.க. தனித்து களமிறங்குகிறது!

கொழும்பு, ஏப். 13

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட திட்டமிட்டுள் ளோம் என்று சுதந்திரக் கட்சியின் உபதலைவர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம மட்டத்தில் இந்தத் திட்டங்கள் வலுவாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு கட்சியாக எங்களுக்கு முக்கிய தேவை அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். மாகாண சபைத் தேர்தல் வரும்போது, நாங்கள் ஒரு கட்சியாக போட்டியிடத் தயாராக இருக்கிறோம் என்றார். (ம)

# வெளிநாட்டுத் தொடர்புடையவர்களால் இராணுவத்துக்கு எதிராகப் பரப்புரை!

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13

வெளிநாட்டு தொடர்புடைய தமிழ் மக்கள் சிலர் இராணுவத்துக்கு எதிராக பொய்ப் பரப்புரை செய்கின்றனர். ஆனால் இலங்கை இராணுவம் மனிதாபிமானம் மிக்கது என்பதை இங்குள்ள பல தமிழ் மக்கள் நன்கறிவார்கள் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணத்தை மேற்கொண்ட அவர், பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு வீடொன்றைக் கையளித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு வீடொன்றை அமைத்துக் கொடுத்துள்ளோம். வீட்டுக்குத் தேவையான உபகரணங்களும் இராணுவத்தால் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்த வீட்டில் வசிக்கும் சிறுமியின் கல்விக்கு உதவித் தொகையும் இராணுவத்தால் வழங்கப்படவுள்ளது.

இலங்கை இராணுவம் ஒரு மனிதாபிமான இராணுவம் என்பதை யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்களும், ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களும் நன்கறிவார்கள். ஆனால், வெளிநாடுகளில் உள்ள சிலர் இங்கு குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். அவர்களிடம் இருந்து பணத்தைப் பெறுபவர்கள் இங்கு இராணுவத்துக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர் - என்றார். (ம)

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

சாவகச்சேரி, ஏப். 13

ஹெரோய்ன் போதைப் பொருளுடன் நாவற்குழி வாசியொருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்று குறித்த நபரைப் சோதனையிட்ட போது 34 மில்லி கிராம் ஹெரோய்ன் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது. (ம-9)

# 25 மாத்திரைகளை விழுங்கிய மனைவி

## கணவன் கைது

திருமலை,ஏப்.13

கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில், மனைவி 25 மாத்திரைகளை விழுங்கியுள்ளார். இந்தச் சம்பவம் கந்தளாய் பேராறுப் பகுதியில் நேற்று நடந்துள்ளது. பாதிக்கப்பட்ட 18 வயதுடைய இளம் குடும்பப் பெண், கந்தளாய் தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருடைய கணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்குள்ளான பஸ் சாரதிக்கு எதிர்வரும் 21வரை விளக்கமறியல்

கொழும்பு, ஏப்.13

பசறையில் விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதி இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 21ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி சமிந்த கருணாதாச உத்தரவிட்டுள்ளார். அத்துடன் விபத்துக்குள்ளான பஸ்ஸின் எதிர் திசையில் வந்த லொறியின் சாரதி சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த மாதம் 20 ஆம் திகதி லுணுகலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று பசறை 13 ஆம் கட்டை பகுதியில் பள்ளத்தினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வீட்டுத்திட்ட நிதியை வழங்குமாறு மலையாளபுரம் மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஏப். 13**

**இந்திய அரசின் நிதி உதவியில் 'மாவட்டத்துக்கு ஒரு கிராமம்' எனும் வீட்டுத் திட்டத்தில் கிளிநொச்சியில் மலையாளபுரம் கிராமம் தெரிவு செய்யப்பட்டு 24 வீடுகள் வழங்கப்பட்ட போதும் அந்த வீடுகளை முழுமையாக அமைத்து முடிப்பதற்கான நிதி பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

கடந்த 2018ஆம் ஆண்டு மலையாளபுரம் கிராமத்தில் காணிகளுடன் 24 வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

இதில் வீட்டுத்திட்டத்துக்கான பணம் முதல்கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் வழங்கப்பட்ட நிலையில் மிகுதிப் பணம் இது வரை வழங்கப்படவில்லை. இதனால் வீடுகளைப் பூரணப்படுத்த முடியாத நிலையில் பயனாளிகள் காணப்படுகின்றனர். இதில் சில பயனாளிகள் வீட்டுத்திட்டத்துக்கான நிதி முழுமையாகக் கிடைக்கும் என்று நம்பி வட்டிக்கு பணத்தை பெற்று வீடுகளை கட்டி முடித்தும் கடனாளிகளாக இருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். எனவே இவ்வாறான நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு வீட்டுத்திட்டத்துக்கான மிகுதிப் பணத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக வழங்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-214)

# தொழிலாளர்களை ஏமாற்றும் பெருந்தோட்டக் கம்பனிகள்

## வடிவேல் சுரேஸ் எம்.பி. காட்டம்

கொழும்பு, ஏப். 13

அரசின் வர்த்தமானிக்கு அமைவாக அனைத்துத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஆனால் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மாத்திரம் ஆயிரம் ரூபாவை வழங்கி ஏமாற்றும் கைங்கரியங்களில் சில கம்பனிகள் ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைமையகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: அரசின் வர்த்தமானியைப் பின்பற்றவேண்டியது அனைத்து தோட்டக் கம்பனிகளினதும் கடமை. அரசால் நிர்வகிக்கப்படும் தோட்டக் கம்பனிகளும் அதனைப் பின்பற்றி அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நாளாந்தக் கொடுப்பனவாக ஆயிரம் ரூபாவை வழங்கவேண்டும். ஆனால் சில கம்பனிகள் நிரந்தர தொழிலாளர்களுக்கு மாத்திரம் ஆயிரம் ரூபாவை வழங்கி ஏனையோருக்கு 700 ரூபாவை வழங்கியுள்ளன. இது கவலைக்குரிய விடயம். அனைவருக்கும் ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும்.

தேயிலை மற்றும் இறப்பர் தொழிலாளர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவும் ஆயிரம் ரூபா சம்பளத்துடன் வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கப்படாத பட்சத்தில் சட்டப்படி வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படலாம். எனவே பெருந்தோட்டக் கம்பனிகளை மனிதாபிமான அடிப்படையில் செயற்படுமாறு கோருகின்றோம்- என்றார். (ஒ.இ)

# போட்டிப் பரீட்சை மே மாதம்

கொழும்பு, ஏப். 13

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மே மாதம் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள பரீட்சைக் கால அட்டவணையில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை பிரதான 9 நகரங்களில் நடைபெறும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (த-இ)

# நடு வீதியில் போத்தலை உடைத்தெறிந்த விசமிகள்

அராலி,ஏப்.13

நடு வீதியில் போத்தல்களை உடைத்து வீசியுள்ள விசமிகள், போக்குவரத்தை மேற்கொள்பவர்களுக்கு அசௌகரியத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.

அராலி மேற்கு அம்மன் கோவில் வீதியில் நேற்று முன்தினம் இரவு இந்த நாசகார செயலை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் சிலர் இப்படியான வேலைகளைச் செய்துள்ளனர். எனவே இது தொடர்பில் உரியவர்கள் அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4,27)

# சுகாதார ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றுங்கள்

## இராணுவத்தளபதி அறிவுறுத்து



கொழும்பு, ஏப். 13

கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு, எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக் காலப் பகுதியில் மக்கள் சுகாதார ஆலோசனைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மீண்டும் அறிவுறுத்தியுள்ளார்.

வெளியிடங்களில் நடமாடும் மக்கள் முகக்கவசங்களை அணிந்து, தனிநபர் இடைவெளியைப் பேணுதல் அவசியம். மக்கள் சுகாதார வழிமுறைகளை உரிய வகையில் பின்பற்றாவிடின், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் சீர்குலைந்து விடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# எதையும் நாம் போராடியே பெற வேண்டிய நிர்ப்பந்தம்

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



நுவரெலியா, ஏப். 13

நாம் எதையும் போராடியே பெற வேண்டியிருக்கும். எனவே சுய நலன்களை மறந்து சமூக உணர்வோடு செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது என்று தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுத்தர முடியாது என்று பலர் தெரிவித்தனர். முயற்சி செய்தால் முடியாதது என்று ஒன்றுமில்லை என்பதை ஆயிரம் ரூபா சம்பள விவகாரத்தில் நிரூபித்துக் காட்டியுள்ளோம். இன்று மனிதாபிமானமாகச் செய்கின்ற சேவைகளுக்குக் கூட நன்றி தெரிவிக்கும் நிலை உருவாகியுள்ளது. ஒரு சமூகம் மனிதாபிமானத்துடன் வாழ்ந்தால் தான் அந்தச் சமூகம் முன்னேற்றம் காணும். அதற்காக நாம் சிறுவயது முதல் மனிதாபிமானப் பண்புகளை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்- என்றார். (ம-4)

# போதைப் பொருள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 13

பெருந்தொகை பணம் மற்றும் போதைப்பொருள்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். சந்தேகநபர் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர். சந்தேகநபரிடம் இருந்து 101 கிராம் ஹெரோய்ன், 113 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 10 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் என்பவை கைப்பற்றப்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# வர்த்தமானி அறிவிப்பால் பலன் கிடைக்கவில்லை

## எதிர்க்கட்சி சாடல்

கொழும்பு, ஏப். 13

அரசால் வர்த்தமானி வெளியிடப்படுகின்றது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதனால் பொதுமக்கள் பெரும் பாதிப்பை சந்திக்கின்றனர். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். 'அரசு சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுக்கின்றது. மக்களின் பிரச்சினைகளைக் கண்டுகொள்ளவதில்லை. பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கட்டுப்பாட்டு விலை என்று வர்த்தமானி வெளியிடப்படுகின்றது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அரசின் குறுகிய பொருளாதாரப் பார்வை காரணமாக மக்கள் மேலும் மேலும் பாதிக்கப்படுகின்றனர்- என்றார் அவர். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# போலிகளும் சட்டங்களும்

பேஸ்புக், ருவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் போலிப்பரப்புரைகள் தொடர்பில் அரசாங்கமும், மக்களும் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், சவால்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்த உரிய சட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன. இதற்கான யோசனை அமைச்சரவைக் கூட்டத்திலும் முன்வைக்கப் பட்டுள்ளது. இப்போது இணையக்குற்றங்களும், சமூக வலைத்தள அவதூறுகளும் பல்கிப் பெருகியுள்ள சூழலில், இத்தகைய சட்டங்கள் உருவாக்கப்படுவது வரவேற்கப்படவேண்டிய விடயம்தான். இத்தகைய சட்டங்களை அரசாங்கம் மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு கொண்டுவரவில்லை. மாறாக ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களிடம் இருந்து சமூகவலைத்தளங்கள் ஊடாக மேற்கிளம்பும் எதிர்ப்புக்குரல்களை நசுக்கவே இப்படிப் புதிய சட்டங்களை அரசாங்கம் இயற்றவுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

சமூகவலைத்தளங்களில் பதிவிடப்படும் தகவல்களின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகங்கள் இருந்தாலும், அவை மக்களோடு கொண்டுள்ள ஊடாட்டவெளி மிக இறுக்கமானது. எனவே அவற்றை எளிதில் சாதாரணமக்கள் நம்பிவிடுவர். இதனைப் பயன்படுத்தி மக்களிடையே கருத்துருவாக்கங்களை உருவாக்கும் முயற்சிகளும் நடந்தேறுகின்றன. 'அரபு வசந்தம்' என்றழைக்கப்படும் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் புரட்சி, சமூகவலைத்தளங்கள் மூலமே ஒருங்கிணைக்கப்பட்டு எகிப்து, லிபியா, யேமன் என்று பரவியது. சமூகவலைத்தளத்தின் தாக்குவன்மைக்கு அரபு வசந்தம் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

ஆனால் இப்படி ஆட்சிமாற்றங்களை உருவாக்கிய இதே சமூகவலைத்தளங்கள், இன்னொரு புறத்தில் தனிநபர் அவதூறுகள், பொய்ச் செய்திகள் என்பவற்றையும் பரப்ப உதவின. பலரும் தங்கள் சொந்த முகத்தை மறைத்து, போலிக் கணக்குகளை உருவாக்கி, தாங்கள் நினைத்ததை எல்லாம் வாந்தியெடுக்கும் பழக்கம் இன்று சமூக வலைத்தளங்கள் எங்கும் நிறைந்து கிடக்கின்றது. அவற்றையெல்லாம், பலரும் ஆய்ந்தறியாமல் உண்மை என நம்பி பகிர்ந்து இன்னும் பலருக்கு அது சென்றடைய வழியேற்படுத்தி விடுவார்கள்.

யாழ்.மாநகரசபை முதல்வர் மணிவண்ணன், நகரைத் தூய்மையாக வைத்திருக்கும் நோக்கத்தோடு 'காவல் படை' ஒன்றை உருவாக்கி, அவர்களுக்கு நீலவர்ணச் சீருடையை வழங்கியிருந்தார். இந்தத் தகவலோடு, தமிழீழக் காவல் துறையின் சீருடையையும் இணைத்து சிலர் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு 'வைரல்' ஆக்கினர். அதன் பின்னர் மணிவண்ணன் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்ட போது 'நீங்கள் தமிழீழக் காவல்துறையைப் போல தனியாக பொலிஸை உருவாக்குவதாக சமூக வலைத்தளங்களில் வந்த பதிவுகளும் உங்களைக் கைது செய்வதற்கான காரணங்களில் ஒன்று' என்று தெரிவித்திருந்தனர். இப்போது சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் போலிச் செய்திகளுக்கு எதிராக சட்டங்களை உருவாக்க முனையும் இதே அரசுதான், அதே சமூக வலைத்தளப் பதிவுகளை ஆதாரமாக வைத்து, எவ்வித ஆய்வுகளுமின்றி யாழ்.மாநகர முதல்வரைக் கைது செய்திருந்தது. குறைந்தபட்சம் பொறுப்பான அரசாங்கமெனில், அந்தப் பதிவுகளை ஆராய்ந்திருந்திருக்க வேண்டும். ஆனால் சராசரி இணையவாசிகள் போல அரசாங்கமும் அந்தப் பதிவுகளை அப்படியே நம்பிக்கொண்டு ஒரு மாநகர முதல்வரை, 'புலிகளை மீள உருவாக்க முனைந்தார்' என்று கைது செய்வதெல்லாம் அபத்தத்திலும் அபத்தம்.

அதேபோன்று தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான பதிவுகள், புகைப்படங்கள் என்பவற்றை சமூகவலைத்தளங்களில் பதிவிடுவோர் கைது செய்யப்படுவர் என்று பொலிஸ் பேச்சாளர் அறிவித்த கையோடு, சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்த சட்டங்கள் இயற்ற அமைச்சரவையில் யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் அலி சப்ரியின் அறிவிப்பும் வெளியாகியுள்ளது. எனவே இந்த இரண்டு செய்திகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதும், தமக்கு எதிரான கருத்துக்களை சமூகவலைத்தளங்களில் பரவ விடாமல் செய்வதுமே இந்தப் புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டுவருவதன் உண்மையான நோக்கமாக இருக்கமுடியும். சமூக வலைத்தளங்களால் பாதிக்கப்படும் மக்களைக் காக்கவே இந்தச் சட்டங்கள் உருவாக்குப்படுவதாக நம்புவதைவிடவும், நீலிக்கண்ணீர் வடிக்கும் ஓநாயை கொஞ்சம் அதிகமாகவே நம்பலாம்.




# புதுக்காட்டுக் கிராமத்தில் யானைகளால் உயிராபத்து

**கிளிநொச்சி, ஏப். 13**

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்காட்டுக் கிராமத்தில் யானைகளால் தமக்கு உயிராபத்து நேரலாம் என்று அந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர்.**



இது தொடர்பில் புதுக்காட்டுக் கிராம மக்கள் தெரிவித்ததாவது:

புதுக்காட்டுக் கிராமத்துக்குள் புகும் காட்டு யானைகள், அங்கிருந்த பயன்தரு மரங்களை அழித்துச் சேதப்படுத்தும் அசம்பாவிதங்கள் தற்போது அதிகளவில் இடம்பெறுகின்றன. கடந்த சனிக்கிழமை இரவும் இதுபோன்றதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் தென்னைகள் மற்றும் வாழைகளை அழித்துச் சேதப்படுத்தியுள்ளன.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் பல முறை தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தினமும் அச்சத்துடன்தான் வாழ்கின்றோம். உயிராபத்து மிக்கதான சூழலில் உள்ள எமது நிலைபற்றி உரிய தரப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றனர்.

(ம-4,113)

# துரித காப்பெற் திட்டத்துக்குள் வலி.தென்மேற்கில் 12 வீதிகள்

நவாலி,ஏப்.13

துரித காப்பெற் வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ், வலி.தென் மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட 12 வீதிகள் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

12 வீதிகளுக்கான விபரங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளரால், வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளருக்கு அனுப்பப் பட்டுள்ளன.

அதனடிப்படையில் சங்கானை மருத்துவமனை வீதி, சில்லாலை லூர்த்து மாதா வீதி, பண்டத்தரிப்பு அம்மன் வீதி, பிரான்பற்று 4 ஆம் குறுக்குத்தெரு அமிர்தலிங்கம் வீதி, மாதகல் நாவலர் வீதி, இளவாலை உடையார் வீதி, மாரிசன் கூடல் வீதி, கட்டுடை வீதி, மானிப்பாய் மெமோறியல் வீதி, ஆனைக்கோட்டை யூனியன் வீதி, சுதுமலை மூனாமலை வீதி, மானிப்பாய் ஆனந்தா வீதி என்பனவே விரைவில் காப்பெற் வீதிகளாகப் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான மதிப்பீடுகளை பிரதேச சபையின் தொழில் நுட்ப அலுவலர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம,4-50)

# வனவள அலுவலர்கள் மீது தாக்குதல் முயற்சி

## பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு,ஏப்.13

வனவளத் திணைக்கள அலுவலர்கள் மீது நில ஆக்கிரமிப்புக்காரர்கள் தாக்குதல் நடத்த முயற்சித்தனர் என்று தெரிவித்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முறிப்பு காட்டுப்பகுதியில் சட்டவிரோத செயற்பாடு ஒன்று இடம்பெற்று வருவதாக முள்ளியவளை வனவளத்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் விசாரணைகளுக்காகச் சென்ற வனவளத் திணைக்கள அலுவலர்கள் மீது நில ஆக்கிரமிப்புக்காரர்கள் தாக்குதல் நடத்த முயற்சித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் அரச அலுவலர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகளுக்குள் இருந்து மீட்கப்பட்டார் நடராஜர்

யாழ்ப்பாணம்,ஏப்.13

**யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட நல்லூர் பாணான்குளம் பகுதியில் குப்பை போடுவதைத் தடுக்கும் நோக்கில் நடராஜர் சிலை ஒன்று நேற்றுமுன்தினம் வைக்கப்பட்டது. பின்பு அந்தச் சிலை இந்து இளைஞர் அமைப்பொன்றால் கீரிமலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.**



யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியில் நல்லூர் பாணான்குளம் அமைந்துள்ளது. அதனைச் சூழ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட குடியிருப்புகள் உள்ளன.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் வெளியில் இருந்து வரும் நபர்களால் குப்பைகள் கொட்டப்படுகின்றன என்று பல தரப்பினரிடமும் முறையிடப்பட்டது. பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் அந்தப் பகுதியில் குப்பைகள் வீசப்படுவதைத் தடுக்க முடியவில்லை. இதனால் குப்பைகள் வீசப்படும் இடத்தில் திடீரென நடராஜப் பெருமானின் சிலை நேற்றுமுன்தினம் வைக்கப்பட்டது. இவ்வாறு நடராஜனின் சிலை வைக்கப்பட்டமைக்கு பலரும் தமது அதிருப்தியையும் வருத்தத்தையும் தெரிவித்தனர். இதையடுத்து குறித்த சிலை நேற்று மீட்கப்பட்டு கீரிமலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (ம-ஜ.20)

## பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

கிளிநொச்சி, ஏப்.13

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் சகல அடியார்கள் மற்றும் உபயகாரர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

## நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் அண்மையில் இணுவிலிலுள்ள சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெற்றன.

இதில் தலைவராக யாழ். நகர வர்த்தகர் க.ஜினதாஸ், செயலாளராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த வை.ஆனந்தஜேஸ்கரன் மற்றும் பொருளாளராக கொக்குவில் தபாலகத்தைச் சேர்ந்த தெ.சுகிர்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் இவ்வாண்டுக்கான போட்டி நிரலும் தயாரிக்கப்பட்டுள்ளது. (ச-288)


## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.13


யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அமைந்து அரியாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்படி நாளைமறுதினம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தொடக்கம் 11 மணி வரை கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதிச்சந்தி 11 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரை பேரின்பநாயகம் வீதி அரியாலை, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதிச் சந்தி ஆகிய இடங்களில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் என்று மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ)



மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் துப்பரவுப் பணிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாடசாலை அதிபர் ஜேசுதாஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டன. இதில் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் இணைந்து துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டனர். (ச- 159)



## மலேரியாவைத் தடுப்போம்; மன்னாரில் சித்திரப் போட்டி

மன்னார், ஏப்.13

உலக மலேரியா ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு 'மலேரியா அற்ற இலங்கையை வைத்திருப்போம்' எனும் தலைப்பில் மாணவர்களுக்கு சித்திரம் வரைதல் போட்டி பரீட்சை கடந்த 10ஆம் திகதி மன்னார் அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மத்திய சுகாதார அமைச்சின் மலேரியா தடுப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் றோட்டரி கழகம், செலான் வங்கி மற்றும் யூனியன் வங்கி ஆகியவற்றின் இணை அனுசரணையுடன் 11 தொடக்கம் 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கே குறித்த போட்டிப் பரீட்சை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ரி. விநோதன் மற்றும் மன்னார் கல்வி வலய பணிப்பாளர் பிரெட்லி ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். (ச)

## கொள்ளைச் சம்பவம்;
## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

முள்ளியவளை,ஏப்.13

தொலைபேசியை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முள்ளியவளை கணுக்கேணி பகுதியில் கடந்த 9 ஆம் திகதி வீதியால் சென்ற பெண் ஒருவரின் கைத் தொலைபேசி கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சி.சி.ரி.வி யின் உதவியுடன் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் முள்ளியவளை உள்ளிட்ட பகுதிகளில் ஏற்கனவே பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவ ரென்ற சந்தேகத்தில் கைதாகி பிணையில் விடுதலையானவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற வாசல்தலத்தில் சந்தேக நபரை முன்னிலைப்படுத்தியபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ-19)

## ஆவணங்கள் இல்லாவிடின் காணிகள் பறிபோகும் அபாயம்

யாழ்ப்பாணம், ஏப்.13

தொழில் முயற்சிக்கான காணிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வுகளில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கத் தவறுவதால் காணிகள் கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளதென சுட்டிக்காட்டப்படுகின்றது.

இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் ஒரு லட்சம் ஏக்கர் காணி வழங்கும் திட்டத்தின் கீழ் கோரப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் பிரகாரம் பெருமளவானோர் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். நேர்முகத் தேர்வின்போது கருத்திட்டம் தொடர்பான விரிவான அறிக்கை, இளம் தொழில் முயற்சியாளர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சமாதான நீதிவானால் வழங்கப்படும் சத்தியப் பத்திரம் போன்ற ஆவணங்கள் சமர்ப்பிக்கத் தவறின் அவர்களுக்கு காணிகள் கிடைக்காமல்போக வாய்ப்புண்டு என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-9)





## குருதிக் கொடை

வவுனியா,ஏப்.13

வவுனியா மருக்காரம்பளை கிராம அலுவலர் பிரிவின் சமயபுரம் சனசமூக நிலைய மண்டபத்தில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

மருக்காரம்பளை கிராம அலுவலர் நா.ஸ்ரீதரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் பிரதம விருந்தி னராக கலந்து கொண்டார். இதில் ஏராளமான இளையோர் பங்குபற்றி குருதிக்கொடையளித்தனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர் செல்லம் அம்பலவாணருக்கு கலாஜோதி விருது



கொழும்பு பிரதேசசெயலக அலுவலக கலாசாரப் பிரிவின் அனுசரணையுடன் அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் மற்றும் கண்ணகி கலாமன்றம், ஆகிய அமைப்புக்களால் பிரபல நாடகக் கலைஞரும் சமூக சேவையாளருமாகிய செல்லம் அம்பலவாணர் கலாஜோதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
சமூகசேவையாளர்கள், கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கொழும்பு பிரதேச செயலக காரியாலய கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்விலேயே அவருக்கு கலாஜோதி விருது வழங்கப்பட்டது. (110)







## பட்டர்பிளை சர்வதேச பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள்

'பட்டர்பிளை' சர்வதேச பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா சங்கானையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ச.ஜயந்தன் கலந்துகொண்டார்.
விருந்தினர்களாக உளவளத்துறை ஆலோசகர் எஸ். திலகபிரகாஷ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் ரி.கோபிநாத், நூலகர் சி.சஜீவகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)



## அல்லை. பராசக்தி வித்தியாலய மொழி முகாம் செயற்பாடுகள்

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மொழி முகாம் செயற்பாடுகள் சுகாதார வழிகாட்டலுக்கமைய பாட சாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. பாடசாலை அதிபர் கோபாலு பத்மநாதன் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் இளங்கோ கலந்துகொண்டார். (ச)

# சிறுபோக நெற்செய்கை கமக்கார அமைப்பிடம்!

## மலையாளபுரம் விவசாயிகள் அதிருப்தி

**கிளிநொச்சி, ஏப்.13**

**கிளிநொச்சி மலையாளபுரம் புதிய ஐயன்குளத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்ச் செய்கையை கமக்கார அமைப்பிடம் வழங்கியமைக்கு விவசாயிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.**

புதிய ஐயன்குளத்தில் கீழ் 80 விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கடந்த காலத்தில் சிறுபோக நெற் செய்கையில் குளத்தின் காணப் படும் நீரின் அளவுக்கு ஏற்ப 10 ஏக்கர் தொடக்கம் 15, 20 ஏக்கர் வரை பயிர்ச்செய்கையில் ஈடு பட்டு வந்தனர். மலையாளபுரம் கிராமத்தில் துறைசார் அதிகாரிக ளின் பங்குபற்றலுடன் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை தொடர்பான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, 2021ஆம் ஆண் டுக்கான சிறுபோகம் 15 ஏக்கர் எனத் தீர்மானித்து அதனை மேற் கொள்ளும் பொறுப்பை கமக்கார அமைப்பிடம் அதிகாரிகள் வழங்கி யுள்ளனர்.
அறுவடைக்கு பின் நெல்லை விவ சாயிகளுக்கு விதை நெல்லாக விற் பனை செய்யுமாறும் அதிகாரிகள் தீர்மானித்துன்னர்.
இந்த முடிவு தங்களுக்கு கடும் ஏமாற்றத்தை தந்துள்ளது என்றும் குளத்தில் இருக்கின்ற நீரின் அள வுக்கு ஏற்ப ஒரு சில வாரங்களுக்கு முன் சிறுபோகம் தொடர்பில் தீர்மா னித்திருந்தால் கால் ஏக்கர் வீதம் 80 விவசாயிகளுக்கும் 20 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொண்டி ருக்கலாம்.
தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவால் ஒரு சில விவசாயிகள் பயன் பெற ஏனையோர் பாதிக்கப் படுவர் எனவும் விவசாயிகள் தெரி வித்துள்ளனர்.
இது தொடர்பில் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி பொருத்தமான தீர்வைத் தரவேண்டும் என அவர் கள் கோரியுள்ளனர். (வ-214)



கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் அமைந்துள்ள சிவன்சோலை வயல் பிள்ளையார் ஆலயத்தின் கருவறை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று காலை 10 மணிக்கு இடம்பெற்றது. (ஐ-6)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி, ஏப்.13
மட்டுவில் வடக்கு மோகன் தாஸ் சனசமூக நிலையத் தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரி வும் நேற்றுமுன்தினம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.
நடப்பு வருட நிர்வாகிக ளாக தலைவர் . சு.சுதா கரன், உப தலைவர் த. சிவசண்ணா, செயலா ளர் பி.தளிர்ராஜ், உதவிச் செயலாளர் த.காஸ்ரோ, பொருளாளர் த.முரளித ரன், கல்வி மற்றும் நூலக செயலாளர் சி.சாகித்தி யன், கலைச் செயலாளர். த.மகாதேவன், விளை யாட்டுக் கழகச் செய லாளர் சி. சுபாஸ்கரன், நிர்வாக சபை உறுப்பி னர்களாக வே.தங்கராசா, மா.சுபாகரன்,து.துசீபன், த.குபேரன், சூ.பத்திநா தன், ர.தனுசிகன் , த. [illegible] ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-9)

## சேதமடைந்த வீதியை சீரமைக்க கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஏப்.13
வடலியடைப்பிலிருந்து சங் கானை ஆதார மருத்துவம னைக்கு செல்லும் ஆஸ்பத்திரி வீதி கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதனால் மருத்துவமனைக்கு செல்லும் நோயாளர்கள் 2 கிலோ மீற்றர் தூரம் சுற்றி செல்ல வேண்டிய அவல நிலைக்கு தள் ளப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பண்டத்தரிப்பு உப அலுவலக பிரிவுக்குட்பட்ட வடலியடைப்பு முதன்மை வீதியிலிருந்து சங் கானை ஆதாரமருத்துவம னைக்கு செல்லும் ஒரு கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியை சாந்தை,வடலியடைப்பு, சில் லாலை, பனிப்புலம் உட்பட பல கிராமங்களை சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். நோயாளர்களின் நலனைக் கருத் தில் கொண்டு மேற்படி வீதியை விரைவாக சீரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-115)

## செல்வம் எம்.பியின் பெயரில் மோசடி

**விசாரணைக்கு கோருகின்றார் அவர்**



நாடாளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாத னின், இறப்பர் முத் திரை பொறிக்கப்பட்ட கடிதங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுள் ளன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது தொடர்பில் செல்வம் எம்.பி. விசா ரணையைக் கோரியுள்ளார்.
அரச பணி கடித உறையில் அனுப் பப்பட்டுள்ள இந்தக் கடிதங்களில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் இறப்பர் முத் திரை பொறிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.
'இது தொடர்பில் நான் இன்றே அறிந் தேன். எனது பெயரிலான முத்தி ரையை பயன்படுத்தியுள்ளமை தவறு. ஐக்கிய தேசியக் கட்சியால் இந்தக் கடி தங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது. அது குறித்து கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரமசிங் கவிடம் வினவுவேன். விடயங்களை ஆராய்ந்த பின்னரே விசாரணைகள் கோரப்படும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநா தன் தெரிவித்தார்.
அதேவேளை 'இது தொடர்பில் இது வரை எமக்கு முறைப்பாடு கிடைக்க வில்லை. முறைப்பாடு கிடைத்தால் அதனை ஆராய முடியும்' என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்துள்ள நிலை யில், செல்வம் எம்.பியின் பெயரில் இவ்விதம் மோசடி செய்யப்பட்டுள்ள மையால் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் தற்போதும் உறவு நிலை உள்ளதா என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் விற்பனைச் சந்தை பிரதேச செயலர் ச.சிவசிறியால் வீமன்காமம் பொதுச் சந்தைக்கு அருகில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. (வ-9)

# கனரக வாகனங்களால் சிதைவடையும் டச்சு வீதி

சண்டிலிப்பாய்,ஏப்.13

**சண்டிலிப்பாய் சந்தியையும், உடுவில் மகளிர் கல்லூரிச் சந்தியையும் இணைக்கும், சங்குவேலியை ஊடறுத்து செல்லும் டச்சு வீதி கனரக வாகனங்களின் போக்குவரத்தால் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது என்று பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது-

இந்த வீதியால் தினமும் ஆயிரக்கணக்கானோர் பயணிக்கின்றனர். யாழ்ப்பாண நகரத்துக்குச் செல்லும் சிறந்த பாதையாகவும் இது காணப்பட்டது. எனினும் அண்மைக்காலமாக இந்த வீதியால் செல்லும் அதிக அளவிலான கனரக வாகனங்களால் குறித்த வீதி சிதைவடைந்துள்ளது. இந்த வீதி புனரமைக்கப்பட்டு ஓரிரு ஆண்டுகள் குறித்த வீதியால் கனரக வாகனங்கள் செல்லத்தடை என்ற சமிக்ஞைப்பலகை போடப்பட்டிருந்தது.

எனினும் சிறிது காலத்தில் அந்த சமிக்ஞைப் பலகையை காணவில்லை. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வீதியை தரமாக செப்பனிட்டுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் என்றனர்.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரியுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த வீதியின் வயலோடு சேர்ந்த பகுதிகள் சேதமடைந்துள்ளன.

இதனால் போக்குவரத்துக்குச் சிரமமான நிலை காணப்படுகிறது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு இந்த வருட ஒதுக்கீட்டில் குறித்த வீதியை சீரமைக்க எண்ணியுள்ளோம் எனத் தெரிவித்தார். (ஐ-319)

## பாடசாலை விடுமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு

கொழும்பு, ஏப். 13

பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்டதும், எதிர்வரும் ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களின் விடுமுறைக் காலங்களில் மாற்றங்கள் ஏற்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் 5ஆம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இதனால், ஓகஸ்ட் மாத பாடசாலை விடுமுறையை ஒக்ரோபர் மாதத்துக்கு மாற்றுவதற்கு ஆராயப்படுகின்றது.

அதேவேளை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால், டிசெம்பர் மாதத்துக்கான விடுமுறையை ஜனவரி மாதத்துக்கு மாற்றுவதற்கும் ஆராயப்படுகின்றது.

5 ஆம் தர புலமைப் பரீட்சையை ஒக்ரோபர் 3ஆம் திகதியன்றும், க.பொ.த உயர்தரப்பரீட்சையை ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையிலும், க.பொ.த. சாதாரணத் தர பரீட்சையை அடுத்தாண்டு ஜனவரி மாத இறுதி வாரத்தில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (ம-4)



## வீடு கையளிப்பு

கிளிநொச்சி, ஏப்.13

கிளிநொச்சி விநாயகபுரம் கிராமத்தில் வசிக்கும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பால் வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அமரத்துவம் அடைந்த இ. ரேவதி என்பவரின் நினைவாக ஜேர்மன் மற்றும் கனடாவில் வசிக்கும் அவரது பிள்ளைகள் இதற்கான நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் பொருளாளர் ம.ஜெஸ்மன், மக்கள்நல்வாழ்வு மையத்தின் பொருளாளர் [illegible] ஆகியோர் இணைந்து இந்த வீட்டை [illegible] கையளித்தனர். (வ-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு பண்டிகைக்கால கொடுப்பனவு

கிளிநொச்சி, ஏப்.13

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான 5000 ரூபா பண்டிகைக்கால கொடுப்பனவு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக நேற்று வழங்கப்பட்டுள்ளது. கிராம சேவையாளர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இணைந்து இதனை வழங்கினர். (வ-113)



## மன்னார் பயனாளிகளுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு

மன்னார்,ஏப்.13

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு, மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு, மன்னார் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரதீப் தலைமையில், பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக தொழில் வாய்ப்பை இழந்த, வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்காக ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு அரசால் வழங்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறுவோர், அங்கவீனர்கள், முதியோர் கொடுப்பனவு பெறுவோர் மற்றும் சிறுநீரக நோய்க் கொடுப்பனவு பெறும் 32 ஆயிரத்து 277 குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (க-4-213)

## தந்தை செல்வா ஞாபகார்த்தமாக சமூகத் தலைவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.13

வடக்கு மாகாணத்தில் சமூகத்தின் அபிவிருத்திக்காக, தமிழுக்காகத் தொண்டாற்றிய சமூகத் தலைவர்கள் 14 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தந்தை செல்வநாயகம் ஞாபகார்த்தமாக இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் கணபதிப்பிள்ளை தளையரட்ணம் தலைமையில், எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு, பண்டத்தரிப்பில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள். பிரதேச சபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வில் கண் பரிசோதனை செய்யப்பட்டு, கண்ணாடி அவர்களில் 52 பேருக்கு கண்ணாடிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-50)

**தமிழ் ஆண்டுகள் வரிசையில் இந்த ஆண்டு 'பிலவ' வருடமாகத் தொடங்குகிறது. அதன்படி அனைத்து ராசியினதும் பலன்களைப் பார்ப்போம்.**

பிலவ வருட

# தமிழ்ப்புத்தாண்டு ராசிபலன்கள்




நீங்கள் யார் மனதையும் புண்படுத்தமாட்டீர்கள். எல்லோருக்கும் உதவுவீர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு இந்தப் பிலவத் தமிழ்ப்புத்தாண்டு பலன்கள் எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். இனி வீட்டில் அமைதி தங்கும். மனைவியுடன் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். மனைவி வழி உறவினர்களுடன் இருந்த சங்கடங்கள் நீங்கி, உறவு பலப்படும். பிள்ளைகள் இனி உங்களின் ஆலோசனைகளை ஏற்பார்கள். தடைப்பட்ட கல்யாணப் பேச்சு வார்த்தைகள் சுபமாக முடியும். கால் வலி, இடுப்பு வலி, முதுகு வலி நீங்கும்.

ஆனி மாதத்தில் ஆரோக்கியம் அதிகரிக்கும். அழகு கூடும். முகம் மலர்ச்சி அடையும். உங்கள் மகனுக்கு வேலை கிடைக்கும். கார்த்திகை மாதம் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். அக்கம் பக்கத்தவருடன் ஒருவருக்கு ஒருவர் அனுசரணையாக நடந்து கொள்வீர்கள். உங்களின் கனிவான பேச்சால் சண்டை சச்சரவுகள் குறையும். வீட்டில் தள்ளிப் போய் கொண்டிருந்த கல்யாணம் ஆனி, ஆவணி மாதங்களில் சிறப்பாக முடியும். சொந்த ஊரில் மதிப்பு, மரியாதை கூடும்.

**பொருளாதாரம் :** உங்களின் லாப ராசியில் இந்த வருடம் பிறப்பதால் அதிரடி முன்னேற்றங்கள் உண்டு. இந்தப் பிலவ வருடத்தில் துயரங்கள் யாவும் நீங்கும். புரட்டாதி மாதம் முதல் புரட்சிகரமான முடிவுகள் எடுப்பீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை அதிகரிக்கும். இதுவரை, தொழில் தொடங்கலாம் என முயன்றபோது தடைகளும், தாழ்வு மனப்பான்மையும் தானே வந்தது... இனி நீங்கள் எதையும் தகுந்த முன்யோசனையுடன் செய்வீர்கள்.

### குருபகவான் தரும் பலன்கள்

14.4.2021 முதல் 13.9.2021 வரை மற்றும் 13.11.2021 முதல் ஆண்டு முடியும்வரை குரு 9ஆம் வீட்டில் அமர்வதால் எதிர்பாராத பணவரவு, பெரிய பதவிகள், சொத்துச் சேர்க்கை என அனைத்து யோகமும் கூடிவரும். அசுர வளர்ச்சியடைவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். குடும்பத்தின் வருமானமும் உயரும். ஆனால் 14.9.2021 முதல் 12.11.2021 வரை குரு 8 இல் மறைந்திருக்கும் நேரத்தில் ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது நல்லது.

### ராகு கேது தரும் பலன்கள்

20.3.2022 வரை ராசிக்கு 12ல் ராகு நிற்பதால் பயம், கோபம், தூக்கமின்மை, வீண்செலவு, திடீர் பயணம் உண்டாகும். கேது 6ஆம் இடத்தில் நிற்பதால் பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். 21.3.2022 முதல் வருடம் முடியும் வரை ராகு லாப வீடான 11ஆம் வீட்டுக்கு வருவதால் உங்களின் தகுதி உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கேது 5 ஆம் இடத்தில் நிற்பதால் வீண் குழப்பம், பிள்ளைகளால் மன வருத்தம், குடும்பத்தில் அதிருப்தி, நெருங்கிய உறவினர்களுக்குள் சின்ன சின்ன மனஸ்தாபங்கள் வந்துபோகும்.

### சனிபகவான் அருளும் பலன்கள்

இந்த ஆண்டு முழுக்க அஷ்டமத்துச்சனியாக வருவதால் எதிலும் பயம், போராட்டம், மறைமுக விமர்சனம், தோல்வி மனப்பான்மை, வீண்பழி வந்து போகும். பணப்பற்றாக்குறை, கணவன் மனைவிக்குள் பிரிவு வந்து நீங்கும். வாகனத்தை கவனமாக இயக்குங்கள். கௌரவக் குறைவான சம்பவங்கள் நிகழும்.

**உத்தியோகம் :** வேலைச்சுமையும், விரக்தியும் நீங்கும். கடுமையாக உழைத்தும், நல்ல பெயர் வாங்க முடியாமல் அதிருப்தியாக இருந்தீர்களே! இந்த வருடத்தில் உத்தியோகத்திலிருந்த பிரச்னைகள் தீரும். கார்த்திகை, மார்கழி மாதங்களில் புது வேலை கிடைக்கும். சம்பளமும் அதிகரிக்கும். பழைய சம்பள மிகுதி கைக்கு வரும். வெளிநாட்டுத் தொடர்புள்ள நிறுவனங்களில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு மீண்டும் நல்ல வாய்ப்புகள் தேடி வரும். கிசுகிசுக்களின் தொல்லை நீங்கும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டின் பிற்பகுதி சகல சௌபாக்கியங்களையும் அள்ளித் தரும்.**

## பிலவ வருடப்பிறப்பு

ஏப்ரல் 14ஆம் திகதி சித்திரை முதலாம் திகதி பிலவ வருடம் பிறக்கிறது.

**வாக்கிய பஞ்சாங்கப்படி :**
**அதிகாலை 1.39 மணிக்கு**

**திருக்கணித பஞ்சாங்கப்படி :**
**அதிகாலை 2.31 மணிக்கு**

### கைவிசேடம் வழங்கும் சுபநேரங்கள்

**வாக்கிய பஞ்சாங்கம்**

14ஆம் திகதி மு.ப. 9.09 முதல் 9.52 வரை மற்றும் பி.ப. 2.22 முதல் 4.11 வரை

16ஆம் திகதி அதிகாலை 4.14 முதல் 5.07 வரை

17ஆம் திகதி காலை 7.40 முதல் 9 மணிவரை

**திருக்கணித பஞ்சாங்கம்**

14ஆம் திகதி மு.ப. 6.15 முதல் 7.30 மற்றும் மாலை 6.15 முதல் 7 மணிவரை

16ஆம் திகதி மாலை 5.15 முதல் 6 மணிவரை

17ஆம் திகதி காலை 10.30 முதல் 11. 40 வரை

## இன்றைய நாள்



**மேடம்:** பெண்களுக்கு அக்கம்பக்கத்தினருடன் இருந்த வருத்தங்கள் நீங்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். பணவரவு நிம்மதி தரும். பிறர் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** பணியிடம் பற்றி மனதில் நிலவியிருந்த கவலை தீரும். ஆர்வத்துடன் செய்த விஷயங்கள் ஏமாற்றமின்றி நலன் தரும். சிக்கலான பிரச்சினைகளில் சுமுகமான முடிவை எட்டுவீர்கள்.

**மிதுனம்:** நீண்ட நாள்களாக இருந்த கவலை தீரும். நட்பு வட்டம் விரியும். பணியிடத்தில் உங்கள் நிலை நிம்மதியளிக்கும் விதமாய் இருக்கும். நிதானமாக நடந்தாலும் லாபம் வரும்.

**கடகம்:** பணவரவு எதிர்பார்த்த அளவு இல்லாவிட்டாலும் தேவை நிறையும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. உதவி செய்வீர்கள். பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காண்பீர்கள்.

**சிம்மம்:** முக்கிய முடிவு எடுப்பதில் தடுமாற்றம் ஏற்படலாம். நிதானம் தேவை. நேற்றிருந்த ஓரிரு கவலைகள் இன்று மாறி நிம்மதி பிறக்கும். யார் பற்றியும் யாரிடமும் பேச வேண்டாம்..

**கன்னி:** தவறான வழியில் சென்றால் மாட்டிக்கொள்வீர்கள். கவனம் தேவை. பணியாளர்கள் வேலையில் கவனமாக இருப்பது மிகவும் நல்லது. வேலைக்கு முயற்சி செய்பவர்கள் வெற்றி பெறுவீர்கள்.

**துலாம்:** பெரிய முதலீட்டை சற்றே தள்ளி வைப்பது சிறந்தது. குடும்பத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை தலைதூக்கலாம். எல்லோரையும் அனுசரித்துச் செல்வது நன்மை தரும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினருடன் நல்ல புரிதல் இருப்பதால் இணைந்து திட்டமிடுவீர்கள். திருமணம், குழந்தைப்பேறு போன்ற நற்செய்திகள் உண்டு. நற்செய்தி ஒன்று வந்து சேரும்.

**தனுசு:** சிலருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உடனுக்குடன் தீரும். பிள்ளைகளிடம் அன்பாகப் பழகுவது நன்மை தரும். உறவினரால் ஏற்பட்ட வருத்தம் ஒன்று அவராலேயே தீரும்.யோகம் உள்ளது.

**மகரம்:** சுபநிகழ்ச்சிக்கான துரித ஏற்பாடுகள் நிம்மதியை கொடுக்கும். மனத்தடுமாற்றம் இல்லாமல் நிதானமாக செயற்படுவது நல்லது. நன்மைகள் நடக்கும் காலகட்டம். அவசரம் வேண்டாம்.

**கும்பம்:** கோபத்தை தவிர்ப்பது நல்லது. பேச்சில் கவனம் தேவை. பணியிடத்தில் எதையும் நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம். வீட்டிலும், வெளியிலும் வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

**மீனம்:** எதிர்காலம் தொடர்பாக அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். எந்தப் பெரிய முடிவையும் தீர ஆலோசித்து எடுக்க வேண்டும். வேலைப் பொறுப்புகள் அதிகமாகும். பயணம் பற்றி முடிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடி வேலைவாய்ப்பு

- தையல்: ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. தையல் வேலை பழகி வேலை செய்ய விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.
- விற்பனைப் பிரதிநிதி: ஆண்கள் வயது 18-35

சம்பளம்: 15000/- தொடக்கம் 35000/- வரை. அனுபவத்திற்கு ஏற்றாற்போல் வழங்கப்படும்.

021 221 3221 077 017 8009

# மாற்றுத் திறனாளிகளுக்காக மாவட்டம் தோறும் காப்பகம்

## மாற்றுத்திறனாளிகள் அமைப்பு கோரிக்கை

**மட்டக்களப்பு,ஏப்.13**

**மாவட்டங்கள் தோறும் மாற்றுத் திறனாளிகளுக்கான காப்பகம் அமைக்கப்பட வேண்டும் என்று தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

தமிழ் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சந்திப்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை ஏனைய மாகாணங்களிலும் விட அதிகம். பாதிக்கப்பட்டோரின் வலியை ஆற்றுவதற்கும், அவர்களது வாழ்வாதாரத்தை வளப்படுத்துவதற்கும் இலங்கை அரசும், மாகாண அரசுகளும், தொண்டு நிறுவனங்களும், உறவுகளும் ஆற்றிவரும் சேவைகளை நாம் நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

இருந்த போதும் எமது தேவைகளில் பல இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

அந்த வகையில் மாற்றுத்திறனாளிகள் தங்குவதற்கான வசதிகளுடன் கூடிய காப்பகங்கள் மாவட்டங்கள் தோறும் அமைக்கப்படவேண்டும். பெரிதும் பாதிக்கப்பட்டோருக்கு மாதம் தோறும் 10 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்க வேண்டும்.

கிராமங்களை மையப்படுத்தி இயங்கி வரும் பாதிக்கப்பட்டோர் அமைப்புகளுக்கு பல்வேறு உதவிகளை வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை மக்களிடமும், அரச தரப்பினரிடமும் எடுத்துச் செல்ல அனைவரும் உதவ வேண்டும்- என்றனர்.

(ம-4)

---

15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ். சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் "குருபவனம்" கண்டி வீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## பஞ்சாட்சரம் கிருபாகரன்

(உரிமையாளர் சாரங்கன் நகைமாடம் - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

பிறப்பு 11.01.1970 — இறப்பு 13.04.2006



அன்பின் உருவமானவனே. நிலவாய்
எங்கள் வாழ்வில் ஒளி வீசினாய்.
என்றும் எம் இதயத்தில்
அழியா உருவம் கொண்டு

எங்கள் அன்பு தெய்வமாய் வலம் வந்தாய்.
என்று காண்போமோ உன் முகம்.
உன் முகம் காண ஏங்கி தவிக்கிறது
எங்கள் உள்ளங்கள்...

உன்னை இழந்து துணையின்றி
நிர்கதியாய் நிற்கின்றோம்
விதியோ. சதியோ எம்மை பிரித்துவிட்டது
இனி என்று காண்போமோ உன் முகம்
இன்னும் எத்தனை ஜென்மங்கள்

சென்றாலும் உன்னை எங்கள் இதயத்தில்
வைத்து பூசிப்போம். எங்கள் அன்பானவனே
உன் நினைவுகள் என்றும் எம் வாழ்வில்
நிழலாக தொடரும்..

**என்றும் உன் நினைவுகளுடன்.....**

அம்மா, அண்ணாமார், அக்கா, தங்கைமார், அண்ணிமார், அத்தான், மச்சான்மார், பெறாமக்கள், மருமக்கள்,

ஓம் சாந்தி, ஓம் சாந்தி

குடும்பத்தினர்.

---

கொரோனாவால் பாதிப்புற்றோருக்கு

# 5000 ரூபா வழங்கும் நிகழ்வு திருமலையில்

கொழும்பு, ஏப்.13

சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசால் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான கபில நுவன் அத்துகோரள கலந்து கொண்டு கொடுப்பனவுகளை வழங்கி வைத்தார். (ச)

---

# அமெரிக்கத் தூதுவரை சந்தித்தார் தினேஸ்!

கொழும்பு,ஏப்.13



வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி. டெப்லிட்ஸ்க்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வழிகாட்டுதலின் கீழ் நாட்டில் நடைபெற்று வரும் பல்வேறு சாதகமான முன்னேற்றங்கள் குறித்து அமைச்சர் தூதுவருக்கு விளக்கமளித்தார். அபிவிருத்தி உதவி உட்பட இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் என்பவை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

(ஐ)

---

# மரண அறிவித்தல்

## செல்லையா சிவராசா



பிறப்பு 10.04.1940 — இறப்பு 12.04.2021

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோகரத்தினம், சுப்பிரமணியம் மற்றும் ஆனந்தராசா, ஞானமலர், சற்குணநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ராஜசிங்கம், லில்லி மற்றும் சுந்தரவல்லி, ஸ்ரீபாலன், நடராசா, குஞ்சுத்தம்பி, கோபாலகிருஸ்ணன், கைலாசபதி, தங்கராணி, கணேசமூர்த்தி, கலாவதி ஆகியோரின் மைத்துனரும், குகநேசன், சதீஸ், நிசாந்தன், தர்சிகா, சுகந்தன், சுதாகர், யாழினி, துஷானி, பிரஷானி ஆகியோரின் அன்பு மாமாவும், அஸ்வினி, நிராஞ்சலி, மதுஷன், கிரித்திகா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


மீசாலை கிழக்கு, மீசாலை.
தொடர்பு:
077 254 2828, 076 603 6359

தகவல்:
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்

## தம்பு அரசரட்ணம் (அரஸ்)



தாயின் மடியில் 07.04.1950 — ஆண்டவன் அடியில் 12.04.2021

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அரஸ் என அன்பாக அழைக்கப்படும் தம்பு அரசரட்ணம் அவர்கள் நேற்று (12.04.2021) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு-இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம்-பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், றஞ்சி என அழைக்கப்படும் மனோரஞ்சினியின் பாசமிகு கணவரும், றொணி என அழைக்கப்படும் வசீகரனின் (பிரான்ஸ்), பாசமிகு தந்தையும், சோபியின் மாமனாரும், இனியாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகரட்ணம், இராசேந்திரம், பரராஜசிங்கம், சிவசுப்பிரமணியம், பாக்கியவதி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற அல்பிரட்டம்மா மற்றும் கமலாதேவி, மகேஸ்வரி, காலஞ்சென்ற அரியராணி மற்றும் சோதிப்பிள்ளை, தனபாலசிங்கம் காலஞ்சென்ற இந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், சதீஸ்குமார், நந்தகுமார், கல்ப்பனா, தாமரி, மொறிஸ், கவிதா, கல்யாணி, யசிதரன், கஸ்தூரி, தனுஷன், அலன், நந்தினி, காலஞ்சென்ற நவீன் மற்றும் நளின், சுவீந்தி, குமரன், சுஜீவா காலஞ்சென்ற பகீரதன், மற்றும் பரணிதரன், விஜிதா ஆகியோரின் சிறிய தந்தையாரும், சோபா, ரூபி, பிரதீப் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.04.2021) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல.70/3 அரசடிப்பிள்ளையார் கோவில் வீதி நாயன்மார்கட்டில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேயர் மணிவண்ணன் கைது கோத்தாபய அரசின் நாடகம்

## சஜித் சாடல்



கொழும்பு, ஏப். 13
ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் தொடர்பில் அரசு தெரிவித்த கருத்தை மக்கள் நம்ப மறுத்துள்ள நிலையில், அதனைத் திசை திருப்பும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனைக் கைது செய்து தனது நாடகத்தை அரசு அரங்கேற்றியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.
கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.
யாழ்ப்பாண மாநகர சபை மேயர் தனக்குரிய கடமைகளில் தவறிழைத்திருந்தால் அது குறித்து விசாரணைகளை முன்னெடுத்திருக்க முடியும். அதற்கு சில நடைமுறைகள் உள்ளன. ஆனால் அவரைப் பயங்கரவாதிபோல் சித்திரித்து அரசு கைது செய்தது. தேவையற்ற அச்சத்தை நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.
ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் என்று அரசு சிலரின் பெயர்களை அறிவித்தது. அதனை நாங்களும் ஏற்கவில்லை. மக்களும் நம்பவில்லை. இவ்வாறானதொரு நிலையில் இதனைத் திசை திருப்பும் வகையில் இந்தக் கைது நாடகம் இடம்பெற்றிருக்கலாம், என்றார். (ஒ.இ)

# உலக வல்லாதிக்க சக்திகளின் இலக்காகியுள்ள இலங்கை!!!

## பாகிஸ்தான் தூதுவர் தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 13**
**புவிசார் அமைவிடம் காரணமாக உலகின் வல்லாதிக்க சக்திகளின் இலக்காக இலங்கை மாறியுள்ளது. இவ்வாறு இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் முஹமது சாத் கட்டாக் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். 'பாதுகாப்பு மற்றும் சமாதானம் ஆகியவற்றை ஒவ்வொரு நாடுகளும் தங்கள் எல்லைக்குள் உறுதிசெய்யவேண்டும். இதற்கு ஏனைய நாடுகள் மதிப்பளிக்கவேண்டும். அதேபோன்று ஒவ்வொரு நாடும் தங்களது நாட்டில் உள்ள சிறுபான்மைச் சமூகங்களின் கலை, கலாசாரம் உள்ளிட்ட விடயங்களுக்கு மதிப்பளித்து அவற்றைச் சுதந்திரமாகப் பின்பற்ற அனுமதிக்க வேண்டும்' என்று தூதுவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.இ)

ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்த பின்னர்

# அரச திணைக்களங்களில் எவ்வித வளர்ச்சியும் இல்லை

## சம்பிக்க ரணவக்க எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 13
நாட்டின் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கும் அரச திணைக்களங்கள் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எந்த வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடையவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நல்லாட்சி அரசின் காலத்தில் 20 பில்லியன் இலாபம் ஈட்டிய இலங்கை மின்சார சபை தற்போது 280 மில்லியன் இழப்பைச் சந்தித்து வருகின்றது.
இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு வருவாய் துறை, இலங்கை சுங்கம், விமான நிலையம் மற்றும் மின்சார சபை ஆகியவை ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் அபிவிருத்தி அடையவில்லை. குறித்த திணைக்களங்கள் அனைத்தும் கடனில் இயங்கிக்கொண்டிருக்கின்றன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

## இந்தியா – இலங்கை

# விமானசேவை ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஏப். 13
கொரோனாத் தொற்றுக் காரணமாக முடக்கப்பட்ட சர்வதேச விமான சேவைகளை மீள ஆரம்பிக்கும் ஓர் அங்கமாக இலங்கையுடன் 'எயார் பபுள்' ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இந்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சுத் தெரிவித்துள்ளது.
இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் பயணிகள் விமான சேவையை மீள ஆரம்பிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சார்க் வலயத்திலுள்ள 8 நாடுகளில் ஆறாவது நாடாக இலங்கையுடன் இந்த ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டுள்ளது.
உலகளவில் 28ஆவது நாடாக இந்த ஒப்பந்தம் இலங்கையுடன் செய்யப்பட்டுள்ளது. (ஒ.இ)

# எழுமாற்றுச் சோதனைகள்: இடங்கள் அறிவிக்கப்படாது




கொழும்பு, ஏப். 13
புத்தாண்டு காலப் பகுதியில் கொழும்பிலிருந்து வெளியேறுபவர்களுக்கு எழுமாற்றாக அன்டிஜென் சோதனை மேற்கொள்ளப்படும். ஆனால் எந்தப் பகுதியில் இவை மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
"கடந்த காலங்களில் இவ்வாறான எழுமாற்றுப் பரிசோதனைகள் தொடர்பில், அறிவிக்கப்பட்டது. அதன்போது எந்த இடங்களில் மேற்கொள்ளப்படும் என்பதும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. மக்கள் மாற்றுவழிகளைப் பயன்படுத்தி வெளியேற முற்பட்டனர். இதன் காரணமாக இம்முறை இடங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படமாட்டாது" என்றார் அவர். (ஒ.இ)



# கொழும்பு மாநகர முதல்வரும் புலிகளுக்கு புத்துயிரூட்டினாரா?

## கேட்கின்றார் மங்கள சமரவீர

கொழும்பு, ஏப். 13
சீருடை விடயத்தில் யாழ்ப்பாணம், மாநகர முதல்வரைக் கைதுசெய்திருந்தீர்கள். அவ்வாறெனில், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு புத்துயிர் அளிக்க முயன்றார் என்று கொழும்பு முதல்வர் மீது குற்றம் சாட்ட முடியுமா? என்று கேள்வியெழுப்பியுள்ளார், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர.
இந்த விடயம் தொடர்பாக அவர் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
நக சபை காவல் படையின் சீருடை தொடர்பாக பயங்கரவாதத் தடுப்பு பிரிவின்கீழ் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை, கொழும்பு நகராட்சியின் காவல் படையினரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான சீருடைகளை அணிகின்றார்கள்.
இந்தநிலையில் கொழும்பு முதல்வர் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு புத்துயிர் அளிக்க முயன்றார் என்ற குற்றம் சாட்டப் போகின்றோமா? என்று அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (த-இ)

# நல்லிணக்க வழிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்றோம்!

## ஐரோப்பிய ஒன்றியத் தூதர்களுக்கு கதையளந்த வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஏப். 13
இலங்கை நல்லிணக்க வழிமுறைகளை நடைமுறைப்படுத்துகிறது எனவும் அதில் முன்னேற்றங்கள் இருக்கின்றன எனவும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதர்களுக்குத் தெரிவித்துள்ளார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன.
கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் தூதர்களுடன் அண்மையில் சந்திப்பு நடைபெற்றது.
இந்தச் சந்திப்பில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் தொடர்பிலும் இலங்கையின் அரசியல் பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்பிலும் வெளிவிவகார அமைச்சர் தூதுவர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.
அத்துடன் கொரோனாத் தொற்றின் பின்னர் இலங்கையின் சுற்றுலாத்துறையை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் இதன்போது பின்பற்றப்படும் சுகாதார நடைமுறைகள் குறித்தும் அவர் எடுத்துரைத்துள்ளார். (ஒ.இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் K.K.S வீதி, சிவலிங்கப்புளியடியை வதிவிடமாகவும் கொண்டிருந்த

## செல்லர் நல்லதம்பி நவரத்தினசிங்கம்

ஓய்வுபெற்ற எழுதுனர், விவசாய திணைக்களம், அன்னை தாகசாந்தி மணிமண்டபம் நயினாதீவு - நிறுவனர் 2020



ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறிடுமோ உங்கள் நினைவலைகள் அப்பா!
கண்ணின் மணிபோல்
எம்மை காத்த அன்புத்தெய்வமே
ஆறிடுமோ எங்கள் துயரம்
நீங்கள் பிரிந்து ஒரு வருடம் ஓடிப் போனது
இன்னமும் நம்பவே முடியாமல்
நாங்கள் இங்கே தவிக்கின்றோம்.
ஆண்டுகள் பல சென்றாலும் நீங்காது
உங்கள் நினைவுகளும், நிகழ்வுகளும்

உங்கள் ஆத்மா சாந்தியடைந்து இறைவனடி சேர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி தினமும் உங்கள் பாதம் பணிகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**
**குடும்பத்தினர்**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



"சைவசமயக்காவலர்"

## லயன்.நா.சுபாதர்ஷன்

அன்பின் பிறப்பாய்
பாசத்தின் உறவாய்
பண்பின் சிகரமாய்
சைவசமயத்தின் காவலனாய்
எல்லோருக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்து
ஐயன் பெருமானின்
பாதங்களில் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
"ஓம் சாந்தி"

சக்தி உணவகம்
பழைய பொலிஸ் நிலையத்தடி,
சுன்னாகம்.

**குடும்பத்தினர்.**

# காணவில்லை



அரியாலையைச் சேர்ந்த சந்திரபோஸ் லக்சிகா (வயது 23) என்பவரை கடந்த 06.04.2021 ஆம் திகதியிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**கணவன்- சந்திரபோஸ்**
**074 058 3672**
**075 650 9725**

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10 . 01 . 1945



உதிர்வு
13 . 04 . 2015

## அமரர் சீவரட்ணம் மனோரஞ்சிதமலர்
## (மணி அக்கா)

திதி: அமிர்தசித்த தசமி (06.04.2021)


புன்முறுவல் காட்டியே முகமன் செய்யும் வடிவம்
குறுநகை ததும்ப உரையாடிடும் குணக்குன்றம்
சுறுசுறுப்புடன் சுயமாய் உதவிடும் சுந்தர உருவம்
நறுமலரும் நாண நம்மிடையே நடமாடியவரே
ஈடு இணையற்ற நிம்மதி நாடி
நீடு துயில் கொண்டதேனோ - இனி
பதற்றம் பரவிய பரிதவிப்பிற்கு பரிகாரம் எது?
எதற்கும் இறையருளே துணைநிற்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

182, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.
உறவினர்கள்.

# மரண அறிவித்தல்



## குலதீஸ்வரன் லிபிஷன் (லிபி)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 02.04.1995 | 12.04.2021 |

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட குலதீஸ்வரன் லிபிஷன் நேற்று (12.04.2021) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் குலதீஸ்வரன் ஜெகதீஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், தர்ஷன், தனுசன், சுஜீவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தாரணி, தர்ஷியா, ஆகியோரின் மைத்துனரும், நஜினிகா, ஷயினிகா, வருண், கரிணி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசபாத வீதி,
கோப்பாய்.
077 988 6195

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 25 . 02 . 1946



விண்ணில் 08 . 04 . 2021

## சுப்பிரமணியம் சிவபாக்கியம்

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான சுப்பிரமணியம் சிவபாக்கியம் 08.04.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், லிங்கேஸ்வரன், கலைச்செல்வி, பங்கயற்செல்வி, அருட்செல்வி, விக்கினேஸ்வரன், செந்தில்நாதன் ஆகியோரின் அன்புத் தாயும், தர்சினி, சற்குணராசா, மதிவர்ணன் சிவனேசன், கலைவாணி, அனித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான சண்முகம், கதிரவேலு, சுப்பிரமணியம் மற்றும் பார்வதி, பரமேஸ்வரி, சிவசம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனோஜன், தசலக்ஷன், அம்சவன், சுஜிதா, சுகிர்தன் அச்சனா, மிதுலா, மிதுஷன், கௌதம், பவித்திரன், அட்சயா, காவியா, தனுஷாந், அக்ஷஜா, ஆகாஸ், சதானா, ஹரிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.04.2021 புதன்கிழமை Pole funeraire public Metropole de lyon 18 lavenue Bethelot 69007 Lyon எனும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து மேற்படி முகவரியில் இறுதிக்கிரியைகள் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்: சு.மோகன் (மகன்)
பாண்டியன்குளம்

# மரண அறிவித்தல்

மலர்வு 22 04 1938



உதிர்வு 11 04 2021

## திருமதி லீலாவதி குணசிங்கம்

**மலேசியாவை பிறப்பிடமாகவும் யாழ் பண்டத்தரிப்பை சேர்ந்தவரும், அலம்பிலும் (முல்லைத்தீவு) கொழும்பிலும், வத்தளையிலும் வசித்தவரும் இளைப்பாறிய ஆசிரியை திருமதி லீலாவதி குணசிங்கம் (செம்மலை மகா வித்தியாலயம், முல்லைத்தீவு), அவர்கள் 11.04.2021 ஞாயிற்றுக்கிழமை இரவு வத்தளையில் இயற்கை எய்தினார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் பர்வதம் தம்பதிகளின் அன்பு இளைய மகளும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர், சரஸ்வதி, சண்முகநாதன், யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திருமதி நாகேஸ்வரி, திரு.கனகரத்தினம், திருமதி நல்லமுத்து, திருமதி ,ராஜநாயகி அவர்களின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற கமலசிங்கம், பிரதாபனன், மோகன் மற்றும் ஜெயந்தன், துசியந்தன், சகுந்தலா, துவாகரன், அகலிகை, சித்திராங்கன், கிம்புறுநாதன், பிரகலா, பிரதீபனன், பிரேமி,பிரதீகா,பிரதிலீப் ஆகியோரின் அன்பு மாமியும் சிம்கராஜ்வர்மா, வீம்கராஸ், யாழினி ஆகியோரின் சித்தியும் ஆவார்.

**அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று பி.ப 3.00 மணிக்கு, இல 55-2 அல்விஸ் Town வத்தளையில் அன்னாரின் மருமகள் திருமதி சுதந்திராதேவியின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 5.00 மணிக்கு தகனக்கிரியைக்காக வத்தளை பொது மயானத்தில் எடுத்துச் செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்பு:- இலங்கையில் :-** 077 5716133 / 077 7741172
**சிம்கராஜ்வர்மா** + 141 68579773 **யாழினி** +17787080371
**வீம்கராஜ்** +14166713128

# அதிகாரிகள் 20 பேருக்கும் மறியல் நீடிப்பு




கொழும்பு, ஏப். 13 பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட 20 பேருக்கும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மீதான வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தபோது நீதிமன்று அவர்களுக்கு மறியலை நீடித்தது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களைப் போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-இ)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதி பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **S.ஜெயராஜன்** அவர்களின் அன்புத் துணைவியார்

**ஜெயராஜன் ஜெயரூபா**




அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 31 . 08 . 1939



இறப்பு 14 . 03 . 2021

## அமரர் அம்பலவாணர் பரமேஸ்வரன்

(ஓய்வுநிலை கணக்காளர் - பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், உதயன் பணிமனை)

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் நாங்கள்

அன்னாரின் பிரிவுத்துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

19, கடவைப்புலம்,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

# நன்றி நவிலல்.....



எனது அன்புக் கணவர்

## அமரர் திரு.வே. சிவஞானசோதி

அவர்களை இழந்த தருணத்தில் எங்கள் குடும்பத்திற்கு நீங்கள் அளித்த அனுதாபங்கள். அன்பு மற்றும் ஆதரவுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள் மற்றும் இரங்கல் செய்தி அனுப்பியவர்களுக்கும் நினைவுரைகள் ஆற்றியவர்களுக்கும் இரங்கல் கூட்டங்களை நடத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். **தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் நன்றி செலுத்த முடியாமைக்கு வருந்துகின்றோம்.**

**மனைவி,**
**சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ரயில் சேவைகள் இன்றும் நாளையும் இராது

கொழும்பு, ஏப். 13

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அலுவலக ரயில் சேவை மற்றும் பொது பயணிகள் ரயில் சேவை உள்ளிட்ட 30 ரயில் சேவைகள் இன்று 13 ஆம் திகதியும் நாளை 14 ஆம் திகதியும் சேவையில் ஈடுபட்டமாட்டா.

வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் சேவையில் ஈடுபடும் அலுவலக ரயில்கள் இரு நாள்களுக்கு மாத்திரம்நிறுத்தப் 21 விசேட ரயில் சேவைகளே எதிர்வரும் 18 ஆம் திகதி வரை சேவையில் இருக்கும் என்று ரயில் சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.



பட்டுள்ளன என்று ரயில் சேவைகள் திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பிரனாந்து தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொது மக்கள் தலைநகரில் இருந்து தங்களின் சொந்த இடங்களுக்குச் செல்லவும், பண்டிகைக் காலத்தை நிறைவு செய்து மீண்டும் தலைநகருக்கு அல்லது தங்களின் சேவைப் பிரதேசங்களுக்கு திரும்பவும் 21 விசேட ரயில் சேவைகள் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளன.

கொவிட்19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ள சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பொது மக்கள் ரயில் சேவையில் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். கொழும்பு கோட்டை ரயில் நிலையம் உட்பட பிரதான ரயில் நிலையங்களில் பயணிகள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது பொறுப்பற்ற வகையில் செயற்படுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை ரயில் நிலையங்களுக்குள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். ரயில் நிலைய பொலிஸ் அதிகாரிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு-இ)

## மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில்
மணி விழாக் காணும் எங்கள் ஆசிரியர்

### திரு. சுப்பிரமணியம் ஸ்ரீரங்கன்

(SLTS - I, BEd, Special Trained in Mathematics )

எமது கல்லூரியில் 23.04.2018 தொடக்கம் 03 வருடங்கள் தன் பணியில் சிறந்த நல்லாசிரியராக பணியாற்றி 12.04.2021 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்

**சேவை விவரம்**

| | |
|---|---|
| 1. மன் / வாழ்க்கைப்பட்டான் கண்டல் றோ.க.த.க பாடசாலை (முருகன்) | 02.05.1983 - 31.03.1990 |
| 2. மன் / இலகுப்பிட்டி றோ.க.த.க.பா (நானாட்டான்) | 01.04.1990 - 31.07.1991 |
| 3. கண்டி / இரஜவெல இந்து தேசிய பாடசாலை (திகன) | 01.08.1991 - 04.09.1994 |
| 4. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி | 05.09.1994 - 10.01.2012 |
| 5. சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், கணிதம் - தென்மராட்சி | 11.01.2012 - 18.02.2015 |
| 6. யா / மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | 19.02.2015 - 22.04.2018 |
| 7. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி | 23.04.2018 - 12.04.2021 |

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

## மணிவிழா வாழ்த்து

### திருமதி சதானந்தசிவம் சறோஜினி

ஆரம்பக் கல்வி ஆசிரியை



**சேவைக்காலம்**

- ஆசிரிய முதல் நியமனம் 1989.11.27 வவுனியா பெரிய கோமரசங்குளம் கனிஷ்ட வித்தியாலயம் 31.12.1992 வரை
- 01. 01. 1993இல் இருந்து 31. 12. 1993 வரை வவு/நெளுக்குளம் கலைமகள் ம.வி.
- 01 01.1994இல் இருந்து 31. 12. 2004வரை வவு/பண்டாரிக்குளம் விபுலாநந்தா மகாவித்தியாலயம்.
- 01. 01.2005இல் இருந்து 06.05.2011 வரை வவு/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம்.
- 09 .05 .2011 இல் இருந்து 31.12.2012 மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.
- 01.01.2013 இல் இருந்து 09.04.2021 யாழ். மீசாலை ஆரம்ப வித்தியாலயம்.

இன்று (13.04.2021) மணிவிழா காணும் எமது ஆசிரியை ஓய்வு காலத்தில் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: பாடசாலை சமூகம்
யா/ மீசாலை வீரசிங்கம்
ஆரம்ப பாடசாலை, மீசாலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 04 - 1958



மறைவு 13 - 04 - 2020

### அமரர் பொன்னம்பலம் ஜெயசிங்கம்

(ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)


வாழ்வெனும் ஒளியாய் எம்வாழ்வுக்கு
கிடைத்த அன்பு அப்பாவே!
எம் கண்ணில் நீர் சொரிய
எம்மை விட்டுப் பிரிந்ததேனோ....
துணையென இருந்த நீங்கள்
தவியாய் நாம் தவிக்க
எம்மை விட்டு சென்றதேனோ....
உம்மைத் தேற்றிடுவோம் என்று

இறுதிவரை பேராடினோம் அப்பாவே!
முடியவில்லை குணமாக்க எம்மால்
நாம் தேடும் அப்பாவே
உம்மைத் தேடி விழிகளும் வாடுதே
உம் ஆன்மா இறைவனின்
- திருப்பாதத்தில்
இளைப்பாற்றியடைந்திட
[illegible]ன்றோம்

35/5, வில்பம் தெரு,
விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை.
குடும்பத்தினர் (077 8148056)

## முதலாம் ஆண்டு நினைவு

பிறப்பு 26 . 11 . 1946



இறப்பு 26 . 03 . 2020

### அமரர் சுப்ரமணியம் மகேந்திரராஜா

திதி : வளர்பிறை துதியை

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது நல்லப்பாவே
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாது
உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

40, சமாது வீதி,
திருகோணமலை.
என்றும் நினைவில்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50 பக்க ஆவண...

எங்களிடம் இலங்கைப் போரின் இறுதிக்கட்டம் தொடர்பாக, கவனமான முறையில் சர்வதேச வழக்கறிஞர்கள் மற்றும் சட்டவாளர்கள் மூலம் சேகரித்த ஆதாரங்களைக் கொண்ட விரிவான ஆவணம் ஒன்று உள்ளது என்று தெரிவித்துள்ள சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, பிரிட்டனில் தற்போதுள்ள பாதிக்கப்பட்டவர்கள் பலர் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலம், இந்த ஆவணத்தை உருவாக்குவதற்கும் சவேந்திர சில்வா மற்றும் அவரது கட்டளைக்கு கீழ் இருந்தவர்களுடனும் இணைப்புகளை உருவாக்குவதற்கும் மிகவும் முக்கியமானதாக இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கில் 2009 ஆம் ஆண்டு நடந்த சிவில் போரின் இறுதிக் கட்டத்தின்போது சவேந்திர சில்வா 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்தபோது வாழ்வுரிமை உட்பட பெரும் மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதில் அவரது பங்கு தொடர்பாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் இந்த ஆவணம் விவரித்துக் கூறுகின்றது.

பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்பட்ட இடங்களில் அரசால் மேற்கொள்ளப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் உணவுக்காக வரிசையில் நின்றவர்கள் மீதான எறிகணை மற்றும் குண்டுத் தாக்குதலில் உயிர் தப்பிய தமிழர்களின் கொடுமை நிறைந்த நேரில் கண்ட சாட்சி வாக்குமூலத்தைக் கொண்டு இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பலர் தற்போது பிரிட்டனில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

பாலியல் வன்புணர்வு உட்பட பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதைக் குற்றங்கள் தொடர்பில் சில்வாவின் தொடர்பை இந்த சமர்ப்பிப்பு கவனமாக ஆராய்கின்றது.

இலங்கைக்குப் பிரிட்டனின் புதிய தடை பொறிமுறையைப் பிரயோகிப்பது தொடர்பான அரசியல் விருப்பம் அண்மைய நாடாளுமன்ற விவாதத்தின் போது வெளிப்படையாகத் தெரிந்தது.

இந்த விவாதத்தில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சவேந்திர சில்வா உட்பட இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகப் பிரிட்டன் அரசு ஏன் தடைகளை விதிக்கவில்லை? எனக் கேட்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சவேந்திர சில்வாவின் பெயர் ஆறு தடவைகள் குறிப்பிடப்பட்டது.

2020ஆம் ஆண்டு அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் போரின் முடிவில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாகக் கூறப்பட்ட அவரது வகிபாகத்துக்காக அவரைக் கடுமையாக கண்டனம் செய்தது. ஆனால், பிரிட்டனின் தடைப் பொறிமுறையின் அதிகார வரம்பு விரிவானதாக இருக்கின்றது. இராணுவத் தாக்குதலின்போது மருத்துவமனைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட ஏனைய பொதுமக்களின் இடங்கள் மீதான எறிகணைத் தாக்குதலில் இராணுவத் தளபதியின் பங்கை அது உள்ளடக்குகின்றது என்றும் சூக்கா தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் கண்டனம் பொறுப்புக்கூறல் தொடர்பில் இன்னுமொரு முக்கிய முன்னோக்கிய படியாக இருக்கும். அண்மையில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவானதாக இருக்கும். அந்தத் தீர்மானத்தில் பிரிட்டனே முக்கிய பங்குவகித்தது எனவும் சூக்கா அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(எ-22)

## கொவிட் தொற்றுடன்...

சேர்ந்தவர்கள். ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 406 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 8 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 4 பேர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். மூவர் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்றுவரும் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(எ-26)

## நாளை நோன்பு...

இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் இஸ்லாமிய நாள்காட்டியின் 'ரமழான்' மாத தலைப்பிறை தென்படாததால், ஷாஃபான் மாதத்தை 30 நாள்களாகப் பூரணப்படுத்தி, நாளை புதன்கிழமையில் இருந்து நோன்பு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாத்தின் 5 கடமைகளில் ஒன்றான நோன்பை, முஸ்லிம்கள் இஸ்லாமிய நாட்காட்டியின் 9 ஆவது மாதமான 'ரமழான்' மாதத்தில் நோற்கின்றனர்.

(எ-22)

## யாழ்ப்பாணத்தின்...

வித்ததாவது:

மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் வாழ்கின்றனர். எனவே, அங்குதான் அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அதற்கு அடுத்ததாக தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில்தான் கொத்தணியொன்று உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். அதன்பின்னர் அவர் தொடர்பைப் பேணிய நபர்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் யாழ்ப்பாணத்தில் இரு சந்தைகளில் கொத்தணி இருப்பது தெரியவந்தது.

அதன்பிறகு அவர்களின் தொடர்பாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். எழுமாறாக பரிசோதனையும் நடத்தப்பட்டது. தொடர்பாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் தற்போது நிறைவடைந்து வருகின்றது. கால எல்லை முடிந்ததும் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படும். அதன்போதும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அதனால்தான் தற்போது நாளொன்றுக்கு 200 வரையான தொற்றாளர்கள் பதிவாகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சுறுத்தலான நிலைமை தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய கொத்தணிகள்போல் இதுவும் கட்டுக்குள்வரும். நோய் அறிகுறியின்றி சமூகத்தில் பலர் இருக்கலாம். எனவே, நாட்டில் அனைத்து இடங்களிலும் அவதான மட்டம் பூஜ்ஜிய நிலைமைக்கு வரும்வரை நாம் விழிப்பாகவே இருக்கவேண்டும். சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். என்றார்.

(ம-44)

## விசாரணை...

ணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள் என ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குக் கல்வித் துறை தொடர்பில் அதிகளவு எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் ஆணைக்குழு அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(எ-22)

## பொறுப்பற்ற...

இன்றும் நாட்டின் பல பகுதிகளிலும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் பெரும் எண்ணிக்கையானவர்களுடன், விதிமுறைகளை மீறி நடத்தப்படுகின்றன.

இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளால், அடுத்துவரும் நாள்களில் பாரதூரமான விளைவுகளை பொது மக்கள் எதிர்கொள்ள நேரிடும்.

இவ்வாறு பொறுப்பற்று செயற்படுபவர்களால், ஒழுங்காக சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பவர்கள்கூடப் பாதிக்கப்படுவார்கள்-என்றார்.(எ-இ)

## சமூக வலைத்தளங்களை...

இணைந்து சட்டக் கோவை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது எனத் தெரிய வருகின்றது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமூகங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தும் மற்றும் வெறுப்புணர்வுகளைத் தூண்டும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுத்தல், இரு நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கைகள் மற்றும் நட்புறவுச் செயற்பாடுகள் தொடர்பாக பொய்யான பரப்புரைகளைப் பரப்புதல், இனவாத, மதவாத கருத்துக்களைப் பரப்புதல், நிதி விடயங்களில் பொய்யான கருத்துக்களைப் பரப்புதல் உள்ளிட்ட விடயங்களில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது.

(எ-22)

## யாழில் 1,48,00...

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அரசால் 5 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இந்தத் திட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கும் நடவடிக்கை நேற்றுக் காலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

சமுர்த்தி பயனாளி குடும்பங்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், மூத்த குடிமக்களின் கொடுப்பனவைப் பெறும் குடும்பங்கள், மாற்றுதிறனாளிகள் கொண்ட குடும்பங்கள், சிறுநீரக நோயாளிகள் கொண்ட குடும்பங்கள், 100 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மேற்குறிப்பிட்ட ஆறு பிரிவுகளுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பித்து தகுதி பெற்றவர்கள் போன்ற ஏழு வகையான குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

(எ-20)

## முதியவரை...

பதிகள் வசித்து வந்துள்ளனர். அந்த வீட்டுக்குள் அதிகாலை மூவர் கொண்ட கொள்ளையர் குழு புகுந்துள்ளது. அந்தக் கும்பல் அந்த வயோதிபத் தம்பதியைக் கட்டிவைத்து நகைகள், பணத்தைக் கேட்டுத் துன்புறுத்தியுள்ளது.

வயோதிபரின் கழுத்தை நெரித்துத் துன்புறுத்தி அந்தக் கும்பல் மிரட்டியபோது, சித்திரவதை தாங்காது அந்த 80 வயது வயோதிபர் உயிரிழந்துள்ளார். வீட்டில் இருந்த நகைகள், ஒரு லட்சம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டு அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

செல்லையா சிவராசா (வயது-80) என்பவரே கொள்ளையரின் சித்திரவதையால் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-159)

## புத்தாண்டுக்குப்...

படவுள்ளன என்று தெரியவருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்க, அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் டிலான் பெரேரா ஆகியோருக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## முள்ளிவாய்க்கால்...

இந்த நிகழ்வுகள் நடத்தப்படும். அன்றையதினம் வடக்கு - கிழக்கில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படும். அன்று மாலை 6 மணிக்கு ஆலயங்களிலும், கோவில்களிலும் மணியொலித்து அக வணக்கம் செலுத்தப்படும். வீடுகளிலும் கோவில்களிலும் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தி துக்கநிகழ்வை கடைப்பிடிக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈரானின் அணு ஆலையில் பயங்கரமான வெடிவிபத்து

## பல கோடி டொலர் இழப்பு எனத் தகவல்

**தெஹ்ரோன், ஏப். 13**

**ஈரானில் யுரேனியம் செறிவூட்டல் நடைபெறும் அணு ஆலையில் நேற்றுமுன்தினம் பயங்கர வெடிவிபத்து இடம்பெற்றுள்ளது. இந்த வெடி விபத்தால் பல கோடி டொலர் பெறுமதியாக இழப்பை ஈரான் எதிர்கொண்டுள்ளது. இது பயங்கரவாதச் சதி என்று ஈரானின் அதிபர் ரவுஹானி தெரிவித்தார்.**




ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ந்த நாடுகளுக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி ஆக்கபூர்வ தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் அந்த நாடு எவ்வளவு யுரேனியம் இருப்பு வைத்துக் கொள்ளலாம், எந்த அளவுக்கு அதைச் செறிவூட்டலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டது. அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளன என்று தெரிவித்து அதிலிருந்து விலகினார். மேலும் ஈரான் மீது மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்து வந்தார்.

இதற்கு பதிலடியாக ஈரான் அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறியது. இந்நிலையில் தெஹ்ரோனுக்குத் தெற்கே அணுவாயுதங்களுக்காக யுரேனியம் செறிவூட்டும் பணியை ஈரான் கடந்த 2018ஆம் ஆண்டு தொடங்கியது. அன்றுமுதல் இந்த அணுவாலை பல தடவைகள் இலக்கு வைக்கப்பட்டது. குறிப்பாக இஸ்ரேலால் அந்த ஆலைக்கு ஆபத்து உள்ளது என்று ஈரான் விமர்சித்தது. இந்தப் பின்னணியில் குறித்த அணுவாலையில் வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

இது நிச்சயமாக ஒரு பயங்கரவாதத் தாக்குதல்தான். இது தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரவுஹானி தெரிவித்தார்.

கடந்தாண்டு ஜூலை மாதம் இந்த ஆலையில் கட்டுமானப்பணிகள் நடந்து கொண்டிருந்தபோது பயங்கர தீ விபத்து நேரிட்டதும், இதில் பல லட்சம் மதிப்புள்ள நவீன எந்திரங்கள் எரிந்து நாசமானதும், இது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் என ஈரான் குற்றம் சாட்டியதும் குறிப்பிடத்தக்கது. (ம)



## பேச்சைக் குழப்புவதற்கு ஏற்படுத்தப்பட்ட சதியா?

தெஹ்றோன், ஏப். 13

ஈரானின் அணு ஆலையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல், ஈரான் அமெரிக்கா இடையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பேச்சைக் குழப்புவதற்கான சதியாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஈரான் அமெரிக்கா இடையிலான அணுவாயுத பரவல்தடை ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த பல முனைப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. வியன்னாவில் அமெரிக்க, ஈரானியப் பிரதிநிதிகள் இது தொடர்பான பேச்சில் ஈடுபட்டிருக்கையில் இந்த வெடி விபத்து நிகழ்ந்திருப்பதானது குறித்த பேச்சை குழப்பும் செயல் என்று கருதப்படுகின்றது. (ம)

## ஆப்கனிஸ்தானில் தாக்குதல் 22 தலிபன்கள் உயிரிழப்பு!

காபுல், ஏப். 13

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து 22 தலிபன்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு அரசுக்கும், தலிபன்களுக்கும் இடையே 20 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. ஆப்கானிஸ்தானின் பல்வேறு நகரங்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபன்கள் அங்கு தனியாட்சி அமைத்து வருகின்றனர்.

அந்த வகையில் ஆப்கானிஸ்தானின் வடக்கு பகுதியில் உள்ள படாக்சான் மாகாணத்தில் உள்ள வர்துஜ் நகரம் தலிபன்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த நகரின் கவர்னராக தலிபனான ஹைதர் உள்ளார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அங்கு நடத்தப்பட்ட தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர். ஹைதரும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார். (ம)



## சட்டவிரோத மது உற்பத்தியை தடுக்கச்சென்றோர் தனிமையில்

### *மல்லிகைத்தீவில் இந்த நிலை*

வலி.தென்மேற்கு, ஏப்.13

சட்டவிரோத மதுபான தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்ட குடும்பத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கச்சென்ற முல்லைத்தீவு மதுவரித் திணைக்கள அலுவலர்கள் நால்வர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மல்லிகைத்தீவு கிராமத்தில் கொரோனா அச்சத்தால் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பம் ஒன்று சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்டுவந்த நிலையில், அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்பதை அறியாத மதுவரி திணைக்கள அலுவலர்கள் குறித்த வீட்டில் சோதனைமேற்கொண்டு சட்டவிரோத மது பானத்தை கைப்பற்றியதோடு அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர். அந்தக் குடும்பம் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்ட குடும்பம் என்ற காரணத்தால் மதுவரித் திணைக்கள அலுவலர்கள் நால்வரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

குறித்த குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவேளை சட்டவிரோத மதுபானம் தயாரித்து விநியோகித்து வந்துள்ளமையால் அதைக் கொள்வனவு செய்யச் சென்றவர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்படும் ஆபத்து உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஜ-115)

## விழிப்புணர்வுக் கூட்டம்

கோப்பாய்,ஏப்.13

கொவிட் தடுப்புசி ஏற்றுவதன் பயன் தொடர்பில் விழிப்புணர்வுக் கூட்டம் கோப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

தேசோதய சபையின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற கூட்டத்தில யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சிறுவர் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் பாலசுப்பிரமணியம் சயந்தன் கலந்துகொண்டு கொவிட் தொற்று நோயின் தாக்கம் மற்றும் ஊசியின் பயன் தொடர்பில் விளக்கமளித்தார்.குறித்த கூட்டத்தில் பிரதேசங்களைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் அரச அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் . (ஜ-50)

விற்பனைக்குண்டு
றெட்லேடி பப்பாசிக்கன்றுகள் விற்பனைக்குண்டு.
077 507 0473

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 [illegible] அலுவலகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13. 04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.